பக்கங்கள்: ஆறு

Registered as a News paper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை ரூ 2/-

கடை: 3 யாழ்ப்பாணம் விபவ ஆண்டு புரட்டாதி மீ 19 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஸபர் பிறை 23 (05 10 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர் 201

NEW MASTER
Institute
B.M.C. LANE JAFFNA
A/L 90 (Sat & Sun)
BOTANY
KUGATHARAN
MORPHOLOGY
Batch II: 8.30 - 9.30
Batch I: 9.30 - 10.30
CYTOLOGY
Batch II: 10.30 - 11.30
Batch I: 11.30 - 12.30

NEW MASTER
Institute.
241, NAVALAR ROAD, JAFFNA.
A/L 89 (Sat & Sun)
BOTANY
Kugatharan.
MICROBIOLOGY
(Unit - 9)
ஆரம்பம்: 01-10-1988
Sat. Sun - 6 30 - 7.30
Batch I: 7.30 - 8.30
Batch II:
FUNGUS
Sat, Sun - 12.30 - 1-30 P.M

★ இலங்கைத் தமிழர் பிரச்சினையில்

## திறந்த மனதுடன் இந்தியா செயற்பட்டு வருகிறது

## திருநெல்வேலியில் ராஜீவ்

சென்னை, அக்டோபர் 5

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா திறந்த மனதுடனேயே செயற்பட்டு வருகிறது.

பிரதமர் ராஜீவ் காந்தி முன்கண்டவாறு தெரிவித்தார்.

திருநெல்வேலியில் நேற்றுக்காலை நடந்த கூட்டம் ஒன்றில் பிரதமர் காந்தி பேசினார். அப்போதே அவர் இதனை வெளியிட்டார்.

இலங்கைத் தமிழருக்குப் பல சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஜனநாயக வழிக்குத் திரும்ப மறுத்து வருகிறது

வடக்கு-கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு இந்திய அமைதிப்படை சகல பாதுகாப்புக்களையும் வழங்கும்.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி மேலும் தெரிவித்தார், (ஒ-எ)

### பூநாறி மரத்தடியில் இருவர் கொலை

யாழ்ப்பாணம், அக். 5

யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதி, பூநாறி மரத்தடியில் நேற்று இரண்டு இளைஞர்கள் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானார்கள்.

சுடப்பட்டவர்கள் யார் என்பது குறித்து இச்செய்தி எழுதப்படும் வரை தெரியவரவில்லை

இதேவேளை மருதனார்மடம் பகுதியிலும்நேற்று இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-10)

### நேற்றும் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், அக்.5

ஸ்ரான்லி கல்லூரி மாணவரின் பகிஷ்கரிப்பு போராட்டம் நாளை வியாழக்கிழமை முதல் விஸ்தரிக்கப்படவுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி வீட்டில் வைத்து கைது செய்யப்பட்ட கல்லூரி மாணவனான அரியரத்தினம் கமலகாசன் விடுதலை செய்யப்படாததே போராட்டத்திற்கு காரணம் என்பதாக தெரிவித்துள்ளனர்.

நேற்றும் இரண்டாவது நாளாக மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்னர். (உ-ஒ-10)

### 24 மணி நேரத்தில் 10 பேர் மரணம்

கொழும்பு, அக்.5

கடந்த 24 மணித்தியாலங்களில் தென்னிலங்கையில் 10 பேர் கொல்லப்பட்டனர். 5 பேர் காயமடைந்தனர்.

அனுராதபுர மாவட்டத்தில் 4 பேர் உயிரிழந்தனர். தென் மாகாணத்தில் எஞ்சியோர் உயிரிழந்தனர். (இ-எ)

முச்சந்தி முரளி



போறபோக்கைப் பார்த்தால் கொலைகளில் தெற்கு சாதனை நிலை நாட்டும் போல இருக்கு...!

தமிழீழ விடுதலைப் புலிகளின்

## 12 போராளிகளுக்கும் அஞ்சலி தெரிவித்து அறிக்கை

யாழ்ப்பாணம், அக். 5

வீரமரணம் அடைந்த 12 போராளிகளுக்கும் அஞ்சலி தெரிவித்து தமிழீழ விடுதலைப் புலிகள் அறிக்கை வெளியிட்டுள்ளனர்

அறிக்கை விவரம் வருமாறு:

1987 ஒக்டோபர் 05 இல் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்கள் உட்பட முக்கிய உறுப்பினர்கள் பதினேழுபேர் ஒன்றுச் சயனைற் அருந்தினார்கள். இதில் 12 பேர் வீரமரணம் அடைந்தார்கள்.

தமிழீழ-இந்தியப் போரில் இதுவரை 319 விடுதலைப் புலிகள் வீரமரணம் அடைந்துள்ளார்கள். தமிழீழப் போராட்டத்தில் இதுவரை 950 விடுதலைப் புலிகள் வீரமரணம் அடைந்துள்ளார்கள்.

இவர்களில் 400 போராளிகளுக்கு மேல் சயனைற் அருந்தி வீரமரணம் அடைந்தார்கள்.

தமிழீழ இலட்சியப் போரில் சக போராளிகளையும், ஆதரவாளர்களையும், இயக்க இரகசியங்களையும் காப்பாற்றுவதற்காக இவர்கள் சயனைற் அருந்தி வீரமரணத்தைத் தழுவிக் கொண்டார்கள்.

இவர்கள் அருந்திய சயனைற்றுக்கள் பேசுவதில்லை பேசினால் ......

ஒவ்வொரு போராளியும் எவ்வளவு கனவுகளையும், கற்பனைகளையும் நெஞ்சிலே சுமந்து கொண்டு தமிழீழம் என்னும் இலட்சியத்திற்காக தமிழீழம் அமையும் என்ற நம்பிக்கையோடு சயனைற் அருந்தினார்கள்

நாங்கள் சயனைற் அருந்ியது ஒரு மாகாண சபைக்காகவா? தமிழீழ மக்களே, இவர்கள் குரல் கேட்கின்றதா?

தமிழ்த் தாயின் வயிற்றிலே எவ்வளவோ மகத்தான தியாகங்களுக்கும் சொல்லொணாத் துயரங்களுக்கும் இடையில் வளர்ந்து வரும் தமிழீழக் குழந்தைக்கு எத்தனை சோதனைகள்.

தாயின் கைகளை புலிகள் (6ஆம் பக்கம் பார்க்க)

(6ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகள்

## ஏனைய இயக்கங்களுடன் பேச்சு நடத்த வேண்டும்

### ரெலோ கோருகிறது

மன்னார், அக் 5

இன்றைய நிலையில் இயக்க ஒற்றுமையே முக்கியமானது ஆகும். விடுதலைப்புலிகள் முன்வந்து ஏனைய இயக்கங்களுடன் பேச்சில் ஈடுபட வேண்டும்.

மன்னார் மாவட்ட ரெலோ அரசியல் பொறுப்பாளர் எஸ். விநோ விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அறிக்கையின் விபரம் வருமாறு:-

தமிழ் மக்கள் பலகாலங்களாக அனுபவித்து வருகின்ற துன்பங்களிலிருந்தும், நிம்மதியற்ற வாழ்விலிருந்தும் விடுபடுவதற்கு இன்றைய நிலையில் காணப்படுகின்ற ஒரே வழி விடுதலைப் புலிகள் ஏனைய இயக்கங்களுடன் பேச்சு நடத்தி சகோதரப் படுகொலைகளை முடிவுக்கு கொண்டு வந்து விஞ்ஞை அழிவுகளைத்தவிர்த்து இயக்கங்களுக்கிடையேயான ஒற்றுமைக்கு முன்னோடியாக இருப்பதே ஆகும்.

தமிழ் மக்களின் விடுத

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஆணையாளர் கொலைமுயற்சியை ஆட்சேபித்து

## மின்சாரம், நீர்விநியோகம் வெள்ளியன்று தடைப்படும்

எதிர்வரும் 7-ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை மின்சாரம், நீர்விநியோகம் மற்றும் சுகாதார சேவைகள் உட்பட சகலசேவைகளையும் இடை நிறுத்தப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானத்தை கொலை செய்ய முயன்றதைக் கண்டிக்கும் முகமாகவே இந்நடவடிக்கையை மேற்கொள்ளப்போவதாக யாழ் மாநகரசபை ஊழியர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதுபோன்ற துயரசம்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் நிலையச் சம்பவத்தில் ஜவானும் மற்றும் ஒருவரும் மரணம்

### 17 பேர் வரை காயம்

யாழ்ப்பாணம் அக் 5

யாழ் பஸ்நிலையப் பகுதியில் நேற்று இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் ஒரு ஜவான் உட்பட இருவர் மரணமடைந்தனர்:

இரண்டு ஜவான்கள் உட்பட பதினேழு பேர் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 6-10 மணி அளவில் யாழ் பஸ் நிலையத்தில் அமைந்துள்ள தேனீர்க் கடைகளுக்கு முன்பாக அமைந்துள்ள தண்ணீர்க் குழாயடியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது:

மின்சார நிலைய வீதியில உள்ள மேல்மாடி முகாமில் இருந்த மத்திய ரிசேர்வ் பொலீஸ் படையைச் சேர்ந்த சிலர் முகம் கழுவுவதற்காக தண்ணீர்க் குழாயடிக்கு வந்தனர். அப்போது திடீரென குண்டு ஒன்று வெடித்தது. குழாயடியில் நின்ற ரிசேர்வ் பொலீஸார் மூவர் காயம் அடைந்தனர்.

காயமடைந்த பொலீசார் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். ஒருவர் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

ஏனைய இருவரும் உடனடியாக பலாலி அமைதிப்படை முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து பொலீஸார் அப்பகுதியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது

அப்போதே இளைஞர்

(6ஆம் பக்கம் பார்க்க)

ரெலோ- ஈ. என். டி. எல், எப்.

## இரு இயக்கங்களுடன் கூட்டணியினர் பேச்சு

கொழும்பு, அக்டோபர் 5

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ இயக்கத்துடனும், ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியுடனும் (ஈ என்.டி.எல் எவ்.) தற்போது பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாண சபைத் தேர்தல் சம்பந்தமாகவேஇந்தப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகத் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பந்தப்பட்ட பேச்சுவார்த்தைகளின் விவரங்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-ஐ)

### ஈ.என்.டி.எல்.எவ். பிரமுகர் குழு மட்டக்களப்பில்

யாழ்ப்பாணம், அக் 5

அண்மையில் அரசியல் கட்சியாகப் பதிவுசெய்து கொண்ட ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ என் டி. எல். எவ் பிரமுகர்கள் குழு ஒன்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்துள்ளது.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக நிலைமையை ஆராய்வதற்கே இக்குழுவினர் அங்கு சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

ஈ.பி ஆர் எல். எப்., ரெலோ பிரமுகர்களையும் இவர்கள் சந்தித்து உரையாடினர். (ஒ 21)

மாகாண சபைத் தேர்தல்:

### வடக்கு, கிழக்கில் ஐ. தே. கவும் போட்டியிடும்

### வேட்பாளர் பட்டியல் தயாராம்

கொழும்பு அக் 5

வடக்கு, கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின்பெயர்கள் அடங்கிய பட்டியலை ஐக்கிய தேசியக் கட்சி தயாரித்திருக்கிறது.

இந்தப்பட்டியலில் எத்தனை பேர் இடம்பெற்றிருக்கின்றனர் என்பது பற்றியோ பட்டியலில் யாருடைய பெயர் குறிப்பிடப்பட்டிருக்கின்றது என்பது பற்றியோ விவரங்கள் எதையும் கட்சி இதுவரை வெளியிடவில்லை.

சம்பந்தப்பட்ட பட்டியல் இதுவரை வடக்கு,

(6 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

5-10-1988

புதன்கிழமை

சுபநேரம்:
04 32 முதல் 06 02வரை

ராகுகாலம்:
12.02 முதல் 01 32வரை

இராமலிங்க சுவாமிகள் அவதார தினம்

தமிழ் பேசும் அரசியல் கைதிகள்

## விடுவிக்கப்படாதது குறித்து ஈரோஸ் கண்டனம்

யாழ்ப்பாணம், அக.5

தமிழ் பசும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படாதது குறித்து ஈரோஸ் இயக்கம் கண்டனம் தெரிவித்து அறிக்கை ஒன்று வெளியிட்டுள்ளது.

அறிக்கை வருமாறு:-

கடந்த 30-9-88 ஆம் திகதி தொடக்கம் சாகும் வரை உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கின்ற தண்டிக்கப்பட்ட தமிழ் பேசும் அரசியல் கைதிகளுக்கு எமது முழு ஆதரவையும் தெரிவித்துகொள்கிறோம்.

அவர்கள் உயிருக்காக போராடும் பொழுது வடக்கு-கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைக் கோரி இருப்பது வெந்த புண்ணில் வேல பாய்ச்சுவதுபோல்இருக்கின்றது இந்த சாகும் வரை உண்ணாவிரதிகள் 09 10-88 ஆம் திகதி வரை இலங்கை-இந்திய அரசுகளுக்கு கால அவகாசம் கொடுக்கும் முகமாக நீராகாரத்துடன் மரண நோன்பை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கு செவி சாய்க்கப்படாவிட்டால் 10-10-88 முதல் நீர் அருந்துவதை முற்றாக நிறுத்திவிட்டு மரண யாத்திரியை மேற்கொள்வது என முடிவெடுத்துள்ளார்கள.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதை நிறுத்திவிட்டு இவர்களை விடுவிக்கும் முயற்சியில் இந்திய அரசு ஈடுபட வேண்டும். மரண நோன்பு இருந்துவரும் பின்வரும் தண்டிக்கப்பட்ட தமிழ் பேசும் ஐந்து அரசியல் கைதிகளுக்கு முழு ஆதரவையும் வழங்குமாறு தமிழ் பேசும் மக்களைக் கோரு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தீருவிலில் நினைவுத்தூபி இன்று திறந்து வைக்கப்படும்

### ஊர்வலங்களும நடைபெறும்

யாழ்ப்பாணம் அக 5

கடந்த வருடம் 05 10 87 அன்று சயனைற் அருந்தி உயிர்த்தியாகம் செய்த 12 போராளிகளின் நினைவாக அவர்களைத் தகனம் செய்த இடத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி இன்று காலை 11.00 மணிக்கு அன்னார்களின் குடும்ப உறுப்பினர்களால் (வல்வெட்டித்துறை தீருவிலில்) திறந்து வைக்கப்பட உள்ளது

இவ் விழாவுக்கான ஒழுங்குகளை வடமாராட்சி மாணவர் ஒழுங்கிணைப்புக் குழு, பிரசைகள் குழுக்கள், தமிழ்ஈழம் மக்கள் மன்றம், விளையாட்டுக்கழகங்கள், வர்த்தகர் சங்கம் கடற்றொழிலாளர் ஒருங்கிணைப்புக் குழு, தனியார் போக்குவரத்துச்சங்கம் ஆகியன மேற்கொண்டுள்ளன.

காலை 8 00 மணிக்கு பருத்தித்துறை, நெல்லியடி, தொண்டமானாறு, உடுப்பிட்டி ஆகிய இடங்களிலிருந்து ஆரம்பமாகும் ஊர்வலங்கள் வல்வெட்டித்துறை தீருவில் மைதானத்தைவந்தடையும் ஏனைய இடங்களில் உள்ளவர்கள் வாகனங்களில் வருவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாணவர் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் க. பிரேமச்சந்திரன் தலைமையில நடைபெறும் இவ் வைபவத்தில், மௌன அஞ்சலியைத் தொடர்ந்து தமிழ்தாய் வாழ்த்துப் பாடல் மாணவிகளால் பாடப்படும்.

இதனைத் தொடர்ந்து

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள CD- 90 Honda C C நம்பருடன் (3 மாதம் மட்டும் பாவிக்கப்பட்டது) சகல தஸ்தாவேஜுக்களுடனும் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க. செ. ரங்கன் C/o, ஆ. செல்வரட்னம், G. P S. றோட், கல்வியங்காடு. (6934)

நல்ல நிலையிலுள்ள வீட்டுப் பாவிப்பிலுள்ள Valkswagen 1200 Model கார் உடனடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்க: No; 16, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (A.G.A. அலுவலகம் முன்பாக) (6939)

பாவித்த தளபாடங்கள், கசற் றேடியோ, Show-Case, கட்டில், மேசை, கண்ணுடிமேசை, Electric Cooker, Oven, Hot Plate, மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு 326, பிரதான வீதி, சென் பற்றிக் சந்தியருகில் யாழ்ப்பாணம். (6921)

### கோழிக் குஞ்சு

பிறவுண் சேவற்குஞ்சுகள். பேட்டுக்குஞ்சுகள் Hyline வெள்ளைப்பேடு. கறுப்புச்சேவல்கள் 7 ஆந் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க- சற்குணாராஜா & பிரதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7071)

### கோழிக்குஞ்சு

பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், புரொயிலர் குஞ்சுகள் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். பதிவு செய்க: சற்குணராஜா அன் பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (7067)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளைசிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவல் குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Hyline கறுப்பு, வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன் கிழமையிலும் விநியோகிக்கப்படும். உடன் முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: நல்லூர் பாம்சென்ரர். C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6881)

### இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற் கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: Nallur Farm Centre, C/o Nallur வீடியோ சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர். (6882)

### திருமண அழைப்பிதழ் வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள், (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள். தீபாவளி, நத்தார் புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேடசழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அரஸ் ஜவுளியகம் 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C 357)

## தேவை

பிளேட்டின் மெஷின் மைண்டர் தேவை. நேரில் வரவும். செட்டியார் அச்சகம், கே கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (C/ 359)

ஆயுர்வேத மருந்துகள் தயாரிப்பதற்குப் பெண் பிள்ளைகள் தேவை. மங்களபதி வைத்திய சாலை. அரச வீதி, பண்டாரக்குளம் பிள்ளையார் கோயிலடி, நல்லூர். (6886)

### தவறிவிட்டது

திலகவதி இராசலிங்கம் ஆகிய எனது அடையாள அட்டை (அவிசாவளையில் எடுக்கப்பட்டது) நாச்சிமார் கோயிலடியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும்வழியில் தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (6928)

துரைராஜா குணேந்திரா என்பவராகிய எனது அடையாள அட்டை இல: 590680605V திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காடு சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ராணி ஜுவலர்ஸ், 3A, புலவனர் லேன், நல்லூர் மாக்சற், கல்வியங்காட்டில் ஒப்படைக்கும்படி வேண்டுகின்றேன். (7072)

பொன்னம்பலம் இராசகுமார் ஆகிய நான் 590961639X இலக்கமுள்ள எனது அடையாள அட்டையை தையிட்டி கேசரி வீதிக்கும் மாவிட்டபுரத்திற்கும் இடையே தவறவிட்டுவிட்டேன். அதனைக் கண்டு எடுத்தவர்கள் தயவுசெய்துஉதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (6940)

## சேவை

எங்களுடைய ஸ்தாபனம் இன்று தொடக்கம் மாலை 6. 00 மணி வரை திறந்திருக்கும். யாழ். சைனீஸ் றெஸ்ரோறன்ற், பிறைவேட் லிமிட்டட். முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (7073)

### Nov 12 th, English Assistant Exam

கடந்த கால வினுப்பத்திரங்களுடன் பத்து மணித்தியால மீட்டல் வகுப்புக்கள் ஆரம்பம்: 6-10-1988. சனி, ஞாயிறு நாட்களில் பகல் 11-30 மணி — 12 30 மணி வரை. S. B. Iyar, 12, வைமன் வீது, நல்லூர். (6937)

### சுஜேரா ரவல்ஸ்

மேற்கு ஜேர்மனி (West Germany) க்குச் செல்ல விரும்பும் 25 வயதிற்கு உட்பட்டவர்கள் தாமதியாது சுஜேராஸ் ஸ்தாபனம் No:21 வேம்படிறோட், யாழ்ப்பாணம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (C341)

### அரைச்சலார்

31-10-88 வரை விசேட சலுகை. உங்கள் குளிர்சாதனப் பெட்டிகளை ரூபா 600/- மாத்திரம் செலுத்தி ஒரு வருட உத்தரவாதத்துடன். GAS நிரப்பிக் கொள்ளுங்கள். OMEGA MANIPAY ROAD, JAFFNA. (7065)

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



**செல்வப்புதல்வி அனுசியா அபிராமி**

யாழ்ப்பாணம் நல்லூர் கோவில் வீதியில் (இல. 245) வசிக்கும் பருட்சிதா தம்பதிகளின் ஏகபுதல்வி அனுசியா அபிராமி 5-10-88இன்று தனது முதலாவது பிறந்த நாளை வீட்டில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பப்பா, அம்மம்மா, பெரியம்மா, செல்வம், மாமி, வசந்தி, ஆசை மாமா, தயாகுட்டி, மாமா, ஜீவா, அக்காமார், ஸவர்ணு, குமுதா, மங்களா, ஆசை அக்கா இந்திரா, ராசன் அண்ணு, கமலா அம்மா, சிந்தா அக்கா, தேவி அக்கா, குஞ்சு மாமி, ஸ்ரீ அன்ரி, பபி அண்ணு, ராஜி அக்கா, கந்தசாமி மாமா அனைவரும் பல்கலையும் கற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள். (6932)

## Science Centre

Karaveddy

**புதிய வகுப்புக்கள்:**

A/L 89 (பகல் நேர வகுப்பு)
இரசாயனம் (Bar, பீற்றர், தில்லை)
பௌதிகம் (வர்ணம்)
கணிதம் (நல்லையா)
தாவரவியல் (சர்வா, குகாதரன்)
விலங்கியல் (தங்கராஜா)

**ஆரம்பம்: 7- 10- 88**

3. 00 - 4. 00 விலங்கியல் வகுப்பு நடைபெறும். (6933)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திரு. மூத்ததம்பி நடராஜா**
(யாழ் இந்துக் கல்லூரி அதிபார சபை முன்னுள் இலிகிதர்)

மண்ணில்: 29 - 9 - 1909 விண்ணில்: 16 - 10 - 1987

திதி: 5 - 10 - 1988

அன்பின் இருப்பிடமாய், பண்பின் உறைவிடமாய் கள்ளம் சிறிதுமில்லா வெள்ளை மனதுடனே எங்கள் இல்லத்தில் தெய்வமாய் விளங்கி எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டியாய் நின்று எம்மால் மறக்க முடியாதவாறு உமது அன்பால் ஆட்கொண்ட அன்புத் தெய்வமே! உம்மைப் பிரிந்து நாமெல்லாம் உருகி மனம் வெடிக்கின்றோம், ஐயா என்று சொல்ல அருகதையற்று விட்டோம். ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவு என்றும் அகலாது. உங்களைப் போல் அன்பால் அரவணைக்க எமக்கு இவ்வுலகில் யாருமே இல்லை எங்கள் தெய்வமே!

உங்கள் ஆத்மா சாந்தியடையத் தினமும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்,
மனைவி: திருமதி ந, மங்கையற்கரசி,
மக்கள்: ஸ்ரீ தேவநேசம்,
ந.கோடீஸ்வரன், ந. மீனலோஜனி,
ந. கிரீந்திரன், ந. மனோரஞ்ஜினி,
மருமக்கள்: க. ஸ்ரீதரன், கோ. சுகுணலக்ஷ்மி, ச. ரங்கநாதன், கி.நேசமலர்,
பேரப்பிள்ளைகள்: கிரிஷாலினி, கிரிஷாந்தன், டர்ஷிஹா, சகோதரி,
மைத்துனர் மற்றும் உற்றார் உறவினர்.

கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (6935)

---

## சவூதி அரேபியாவுக்கு உடனடி

### வேலை வாய்ப்பு

1. Wall Painter — 500 & 100 SR (வர்ணப் பூச்சாளர்)
2. Plumber — 600 & 150 SR (குழாய் பொருத்துனர்)
3. Hospital Cleaners — 400 SR (ஆஸ்பத்திரி சுத்திகரிப்பாளர் ஆண்கள் / பெண்கள் (இருபாலாரும்.)
4. Building Construction Cleaners — 400 SR (கட்டிடப் பகுதித் தொழிலாளர்)
5. University Cleaners 400 SR (கலாசாலை சுத்திகரிப்பாளர்)
6. Civil Supervisor — 600 & 150 SR
7. Site Supervisor — 600 & 150 SR
8. Carpenter — 550 & 150 SR (தச்சு வேலையாட்கள்)
9. Mason (மேசன்) — 550 & 150 SR
10. Swimming Pool Attendent — 700 & 150 SR (நீச்சல் தடாகக் கண்காணிப்பாளர்)
11. Electronic Technician — 750 & 200 SR எலக்ரோனிக் தொழில் நுட்பவியலாளர்)
12. Work Schedular — 1200 SR
13. Building Electrician — 650 & 150 SR
14. Generator Electricians — 600 & 150 SR
15. Air Compressor Mechanic — 750 & 150 SR
16. Secretary / Typist — 700 & 100 SR
17. Heavy Equipmnt Mechanic — 900 & 200 SR
18. Cleaning Equipment Mechanics — 800 & 100 SR
19. Boiler Technicians — 1000 & 100 SR
20. Telephone Technicians — 800 & 100 SR
21. Welder — 650 & 150 SR
22. A/C Techniclans — 800 & 100 SR

உடன் கடவுச்சீட்டு 3 பாஸ்போட் சைஸ் படம், 5 வருட அனுபவச் சான்றிதழ்களுடன் உடன் வந்து போவதற்குரிய ஒழுங்குகளைச் செய்யவும்.

பெண்களுக்கு வயது 30 தொடக்கம் 42 வரை.

இரண்டு கிழமைக்குள் பிரயாணம்.

**Age Limits: 21 — 48 years.**

**T V TRAVELS & TOURIST**

[Front of Railway Station]
Brown Road, Kokuvil.

(C 98)

## முதலாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



அமரர்
**கந்தசாமி சண்முகநாதன்**

அன்னை மடியில்: 20- 07- 1947 அநியாய அழிப்பில் 16- 10- 1987

திதி: 5 - 10- 1988

அன்பின் ஊற்றே அணையாத பேரொளியே! அநாதையாக வந்த என்னை ஆதரித்த பண்பாளர் ஆண்டொன்றுனதென்று எம் நினைவுகள் கூறினாலும் ஆறாத மனப் புண்ணாய் அமைந்த அச்சம்பவம் நீறுகிப் போகவில்லை நினைவெல்லாம் நிற்குதையா. உங்களைப்பிரிந்து நாம் தனிமையில் வாடுகிறோம். வெந்திடும் மனத்துயரை எவ்வாறு எடுத்துரைப்போம். பண்பின் தெய்வமே! உங்கள் நினைவினிலே எம் வாழ்நாட்கள் என்றும் நீடித்தே நிலைத்திருக்கும்.

ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
அன்பு மனைவி, மகன், மகள்,
தாய், சகோதரர்கள்,
உறவினர்கள்.

[illegible] வீதி.
திருநெல்வேலி கிழக்கு. (6942)

---

## நேற்றைய எமது சிறப்பு வெளியீடு

1. கொழும்பு மூவிலண்ட் ஸ்தாபனத்தாரின் ஆதரவுடன்
★ பிரபு ★ கார்த்திக் ★ அமலா
"அக்னி நட்சத்திரம்"
(Original Copy)

2. ★ கமலஹாசன் ★ சிதா ★ ஜெமினி ★ K. பாலச்சந்தரின்
"உனனல் முடியும் தம்பி"
(தரமான பிரதி)

3. ★ ராமராஜன் ★ கௌதமி ★ செந்தில்
"எங்க ஊரு காவல்காரன்"
(Original Copy)

**குணம் வீடியோ சென்ரர்**
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C-366)

## COMPUTER PROGRAMMING IN BASE III

பயிற்சிக் காலம்: 2 மாதம்
ஆரம்பம்: 11 - 10 - 1988 (செவ்வாய், வியாழன் வகுப்புகள்)
கட்டணம்: 1250/-(இரு பிரிவுகளாகச் செலுத்தலாம்.)

O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி IBM (Compatible) கம்பியூட்டரில் வழங்கப்படும்.

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவிகளே சேர்க்கப்படுவார்கள். ஆகையால், விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்.

**UNIKCO Computer Centre**

No. 5. மின்சார நிலைய வீதி,
2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
(உப தபாற் கந்தோருக்கருகாமை)

(C325)

## ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில்:-
திருமதி இராசையா - நல்லம்மா 08- 08- 1920
திரு. கணபதிப்பிள்ளை - தில்லைநடராஜா 15- 06- 1940
செல்வன் சாந்தகுமார் - தில்லைநடராஜா 09- 09- 1968
மூவரும் விண்ணில்:- 16- 10- 1987
திதி:- 04-10- 1988

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்களது நினைவலைகள் எமது இதயத்தில் இருந்து என்றும் நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
தில்லைநடராஜா குடும்பத்தினர்.
42, அருணகிரி வீதி,
திருகோணமலை

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**திருமதி மேரி சிவமணி ஞானரத்தினம்**

தோற்றம்: 1- 6- 1905 மறைவு: 4- 10- 1987

அம்மாவே தெய்வம் உலகினிலே யென்று
சும்மாவா சொன்னார் நம் முன்னோர்
இம் மாநிலத்தில் உன்னைப் போல்
அம்மா யாம் யாண்டுமே கண்டதில்லை

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(7138)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை-இந்திய ஒப்பந்தமும் காணிக் குடியேற்றக் கொள்கையும்

பங்களூர் பேச்சுக்களின் போது இலங்கைத் தரப்பை இந்தியத்தரப்புக் கேட்டுக் கொண்டது மாகாணத்தில் உள்ள அரச காணிகளை அந்தந்த மாகாணங்கட்கு 99வருட குத்தகைக்கு விடமுடியுமோ என்பதைப் பரிசீலனை செய்யும்படி, ஆனல் இதை இலங்கை அரசாங்கம் உதாசீனம் செய்து 13ஆவது அரசியல் அமைப்புத் திருத்தச் சட்டம் அப்பென்டிக்ஸ் 11 ல்

1. அரச காணிகள் தொடர்ந்தும் குடியரசுக்குச் சொந்தம்.

2. குடியேற்றம் தேசிய இன விகிதாசாரப்படி இடம்பெறும் என்று கொண்டு வந்துள்ளது. இதன் பிரகாரம் வட, கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் 74½ தமிழர் 12½ இஸ்லாமியர் 8 விகிதம் குடியமர்த்தப்படுவர் முடிவு கிட்டத்தட்ட அடுத்த 25 வருடங்களில் யாழ். குடாநாடு தவிர்ந்த முழு வட, கிழக்கு மாகாணமும் சிங்களப் பெரும்பான்மைப் பிரதேசமாக மாறும்.

உரும்பராய் மக்கள் மன்றம்.

(6884)

## நன்றி நவிலல்


29 - 09 - 88 அன்று எமது தாயாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து அனுதாபங்களைத் தெரிவித்த; காலம் தாழ்த்தயும் தகவல் தெரிந்து தங்கள் அனுதாபங்களைத் தெரிவித்த அருட் தந்தையர், அருட் சகோதரிகள், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்!

பிள்ளைகள்,
எஸ். மரியதாஸ்,
திருமதி ஜே. புதுமைராணி.

மயிலிட்டி,
காங்கேசன்துறை.

C/ 365

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்



அமரர் அ. சாந்தலிங்கம்
(சபாரத்தினம்)

தோற்றம்: 26. 8. 1927
மறைவு: 6. 10- 1988

திதி: 6. 10. 1988

குடும்பம் ஒரு கோவில் என்றீர்
குழந்தைகளே தெய்வம் என்றீர் இங்கோ
பெரும் புயலை வீசி விட்டு
பேசாமல் எங்கு சென்றீர்?
எழுந் துயரை ஆற்ருமல்
ஏங்கி நிக்கும் எம் கண்கள்
அரன் கழல் கீழ் உமைக்காண
அனுதினமும் இறைஞ்சிடுதே
தங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகிருேம்.

06- 10- 1988 அன்ருது இல்லத்தில் அந்தியேட்டிக் கிரியை நடைபெறும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்ருேம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், மைத்துனர்.

(7134)

யாழ். மாவட்டப் பாடசாலைகள்:

## உபகரணப் பற்றுக்குறை 89க்கு முன் தீரும்

யாழ்ப்பாணம், அக். 5

யாழ். மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளின் உபகரணப் பற்றுக்குறையை 1989 ஆம் ஆண்டு முடிவுக்குள் தீர்த்து வைக்க முயற்சி எடுப்போம்.

இவ்வாறு யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. வெற்றிவேலு சபாநாயகம் தெரிவித்தார்.

எமது பாடசாலைகளில் பெரும் குறையாக அமைந்துள்ளது இந்த உபகரணப்பற்றுக் குறையே.

நான் ஏற்கனவே கல்வி அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளேன்.

கடந்த ஆண்டுகளில் கொடுக்கப்படாத உபகரணங்களில் ஒரு பகுதியை யாவது அதற்கு ஈடாக பெற்றுத்தர முயற்சிகளை எடுத்துள்ளேன் என்றும் திரு. சபாநாயகம் தெரிவித்தார். (இ-க)

## ஞாயிறாவு நகரில் நடந்த கொள்ளை!

குருநகர், அக். 5

பத்துக்கும் மேற்பட்ட இனம்தெரியாத ஆயுதம் தரித்தாபர்கள்வீடொன்றினுள் நுழைந்து அங்கிருந்தவர்களைப் பயமுறுத்தி இருபது பவுண் எடையுள்ள நகைகளையும், ரொக்கம் பத்தாயிரம் ரூபாவையும் கொள்ளை அடித்துச்சென்றனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சுமார் 2 மணியளவில் யாழ். சென்: பற்றிக்ஸ் வீதியில், சென: சாள்ஸ் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையிலுள்ளவீடுகளில் ஒன்றில் நடைபெறறது. (ஓ-51)

## 17 வருட கால சேவையில் இப்படியானவர்களை சந்திக்கவில்லை என்கிருர் விடுதலையான ராஜேந்தர்

புதுக்குடியிருப்பு, அக். 5

தமிழீழ விடுதலைப் புலிகள் நூறுவீதம் துணிவு மிக்கவர்கள். எனது 17 வருடகால சேவையில் இவ்வளவு துணிவுமிக்கவர்களைச் சந்தித்ததே இல்லை.

மதுரையைப் பிறப்பிடமாககொண்ட; இந்திய அமைதிப்படையின் சார்ஜன்ட் ராஜேந்தர் இவ்வாறு குறிப்பிட்டார்.

புதுக்குடியிருப்பில் விடுதலைப்புலிகளால் விடுவிக்கப்பட்ட இரு ஜவான்களில் ஒருவரான ராஜேந்தர், பிரசைகள் குழுவினர், பொதுமக்கள் ஆகியோர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்த போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பதிலளிக்கையில் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளிடம் நாம் கைது செய்யப்படுவதற்கு முன்னர் அவர்கள் முரட்டுச் சுபாவம் கொண்டவர்களாகத்தான் இருப்பார்கள் என்று எண்ணியிருந்தோம்.

ஆனல் அவர்கள்எம்மை நடத்திய விதமும், அன்பும் எம்மை மனமுருக வைத்துள்ளது. தம்மை ஒறுத்து எம்மை ஆகரித்தார்கள். மிகவும் அன்பாகவே நடாத்தினுர்கள்.

மிகவும் மனிதாபிமானம்உள்ளவர்கள். இரக்க சிந்தனை உள்ளவர்கள் என்பதைநாம்நன்குஉணர்ந்து கொண்டோம்.

நீங்கள் இங்கே வந்தபோதுஉங்களை அன்போடு வரவேற்றோம். எமது கஷ்டங்களைத்தீர்க்கும் இரட்சகர்களாகவே உங்களைக் கருதினோம். ஆனல்முன்பு நாம் பட்ட கஷ்டங்களை விட நீங்கள் வந்த பின்பு பட்ட கஷ்டங்களே அதிகமாகிவிட்டன. இதுபற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்? என்று ரஜேந்தரைக் கேட்டதற்கு அவர் அளித்த பதில்,

ஏதோ தவறு நடந்துவிட்டது அமைதியைப் பேணுவதே எமது நோக்கம் இருந்தும்நான் என்னிடம் இருந்தஒரு ரவையையாவது எந்தத்தமிழ் மகனுக்கும் எதிராக இதுவரை பயன்படுத்த இல்லை. இனிமேலும்பயன் படுத்தமாட்டேன். இது உறுதிஎன்று சொன்னுர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் போர்முறையில் மிகவும் கெட்டிக்காரர்கள். அதேசமயம், மனிதாபிமானம் மிக்கவர்கள் நல்லவர்கள் தங்கள்கொள்கையில் உறுதி மிக்கவர்கள் அத்துடன் சட்டுப் படும்உள்ளவர்கள் என் குறுகிய கால அனுபவத்தில் நான் இவர்களைப் பற்றி நன்கு அவதானித்துள்ளேன் என்று கூறினுர். (ச 12 9

## யூனியன் கல்லூரி

தெல்லிப்பளை

### ஆண்டு 6 வகுப்பில் அனுமதி பெறுவதற்கான

## பிரவேசப் பரீட்சை, 1989

1. இப்பரீட்சை 29-10-1988 சனிக்கிழமை நடைபெறும்.

2. தற்போது ஆண்டு 5 இல்கல்விகற்கும் மாணவர்கள் மட்டுமே இப்பரீட்சைக்குத் தோறறத் தகுதியுடையவர்களாவர்.

3 பிரவேசப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்களை கட்டணமாக ரூபா பத்து (ரூ 10/) செலுத்திக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கல்லூரியால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் தவிர்ந்த வேறு விண்ணப்பப் படிவங்கள் மூலம் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

4 பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 20-10-1988 வியாழக்கிழமைக்கு முன் அனுபி வைக்கப்படல் வேண்டும். இத்திகதிக்குப்பின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

5. மேலதிக விபரங்களை அலுவலகத்தில் கேட்டறிந்து கொள்ளவும்.

நா. சிறிபுஸ்பநாதன்
அதிபர்.

(7136)

## மட்டுநகரில் ஜெய்சங்கர்

மட்டக்களப்பு, அக். 5

இந்தியத் தூதுவரின் செயலாளர், டாக்டர் ஜெய்சங்கர் 27 ஆம்திகதி மட்டக்களப்பிற்கு விஜயம் செய்கார்.

இவருடன் ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கப்பிரமுகர் திரு கே.வரதராஜப் பெருமாளும் வருகைதந்திருந்தார்.

மட்டக்களப்பு இந்திய படைத்தளபதி அலுவலகத்தில மாகாண சபைத்தேர்தல் தொடர்பாக ஆராய்வதற்காக இவர் வருகை தந்ததாகத் தெரியவருகின்றது. (ஓ 21)

## பாதுகாப்புத் தீவிரம்

யாழ்ப்பாணம், அக். 5

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அமைதிப் படையினர் கேந்திரஸ்தானங்களில் தமது பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தி உள்ளனர்.

வடக்குத் - கிழக்கு மாகாணசபைத் தேர்தலிற்கான ஏற்பாடுகள் தற்பொழுதுமேற்கொள்ளப்பட்டுள்ள இவ்வேளையில் அசம்பாவிதங்கள் ஏற்படாது தடுக்கவே பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அமைதிப் படை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-9)

## உபவேந்தருக்கு நல்வாழ்த்து

யாழ்ப்பாணம், அக். 5

இலங்கை பல்கலைக்கழகங்களின் வரலாற்றில் தங்களது சேவை மகத்தானதாகும்.

திறந்த பல்கலைக்கழகத்தின் சேவையை விரிவாக்கி எமது மாணவரது தேவைகளை உணர்ந்து தாங்கள் ஆற்றிய அரும்பணிகள் உயர்வுடையவை ஆகும்.

யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழக பட்டப் படிப்புக் கல்வி டிப்ளோமா பகுதி II மாணவர்கள் சார்பில் 9.5 வேதெ. தனபாலன யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் துரைராஜாவுக்கு அனுப்பி வைத்துள்ள நல்வாழ்த்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ச)

## திருத்தப்பட உள்ள 19 பாடசாலைகள்

யாழ்ப்பாணம் அக் 5

நோருட் உதவியுடன் 19 பாடசாலைகள் திருத்தப்பட உள்ளன.

இதற்கமைய கீழ்வரும் பாடசாலைகளுக்கு குறிப்பிட்ட வீதத்தில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இணுவில் சைவ மகாஜன வித்தியாலயம் ரூ 8 லட்சத்து 50 ஆயிரம்.

உரும்பராய் இந்துக் கல்லூரி ரூ 6 லட்சத்து 50 ஆயிரம்.

கொக்குவில் இந்து ரூ. 3 லட்சம்

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம் ரூ ஒரு லட்சம்.

நாவலர் மகா வித்தியாலயம் ரூ ஒரு இலட்சத்து 50 ஆயிரம்

மானிப்பாய் இந்துக் கல்லூரி ரூ 2 லட்சம்.

உயரப்புலம் குணபலன் வித்தியாலயம் ரூ 3 லட்சம். வேலணை வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகாவித்தியாலம் ரூ 6 லட்சம்

கொக்குவில் ஸ்ரேஷன் சி சி தமிழ்க் கலவன் பாடசாலை ரூ. 75 ஆயிரம்.

கொக்குவில் மேற்கு சி சி. தமிழ்க் கலவன் பாடசாலை ரூ ஒரு லட்சம்.

திருநெல்வேலி முத்துத்தம்பி வித்தியாலயம் ரூ. 5 லட்சம்.

புங்குடுதீவு ஸ்ரீ கணேச வித்தியாலயம் ரூ 2 லட்சம்.

அளவெட்டி தெற்கு றோ. க பாடசாலை ரூ. 75 ஆயிரம்.


சண்டிலிப்பாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ரூ ஒரு லட்சத்து 50 ஆயிரம்.

பாலாவோடை இந்து தமிழ்க்கலவன்பாடசாலை ரூ. ஒரு லட்சம்.

சாவகச்சேரி றிபேக் கல்லூரி ரூ 7 லட்சம்

சாவகச்சேரி மகளிர் கல்லூரி ரூ 5 லட்சம்.

ஸ்கந்தவரோதய கல்லூரி ரூ 7 லட்சம்.



## கோழிக் குஞ்சு

முழுப்பணமும் முன் கூட்டியே செலுத்தி 250 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்பவர்களுக்கு கீழ்வரும் சலுகை விலைகளில் கோழிக் குஞ்சுகள் விநியோகிக்கப்படும்.

| இனம் | 2 வாரங்களுக்கு முன்னர் முழுப்பணமும் செலுத்துபவர்களுக்கு ரூபா சதம் | 1 வாரத்துக்கு முன்னர் முழுப்பணமும் செலுத்துபவர்களுக்கு ரூபா சதம் |
|---|---|---|
| பிறவுண் சேவல் | 3. 00 | 3. 50 |
| கறுப்பு சேவல் | 6. 50 | 7. 50 |
| வெள்ளைப் பேடு | 12. 50 | 13. 00 |
| கறுப்புப் பேடு | 13. 50 | 14. 00 |
| பிறவுண்பேடு | 13. 00 | 13. 50 |
| புறொயிலர் குஞ்சு | 16. 00 | 16. 50 |

சற்குணராஜா & பிரதர்ஸ்

(7127)

## பிரயாண ஒழுங்குகள்

LIBIYA:
* QUANTITY SURVEYORS
* COMPUTER OPERATORS
* ELECTRICIANS

(VERY ATTRACTIVE SALARIES)

சவூதி:
* பில்டிங் கொம்பனி உதவியாளர்.
* மெக்கானிக் உதவியாளர்.
* ஸ்கூல் கிளினேர்ஸ்

லெபனுன்:
* சப்பாத்துக் கொம்பனி உதவியாளர்.

குவைற், டுபாய் பாஸ்போட் தந்தவர்களும் மற்றவர்களும் காலை 10 மணிக்கு முன் சந்திக்கவும்.

## சிவா மாஸ்ரர்

தொழில் ஆலோசகர்
ஏழாலை தெற்கு.

(7132)

## எண் ஜோதிடம்

எல்லோர் வாழ்க்கையும் இன்பமாக அமைவதில்லை. பலரது வாழ்க்கை கல்லும் முள்ளும் நிறைந்த கரடுமுரடான பாதையில்தான் செல்கிறது. சிக்கலான வாழ்க்கையைச் சீரமைக்க உதவுவதுதான் எண் ஜோதிடம்.

நீங்கள் அதிர்ஷ்டசாலிகளா?
சரித்திர நாயகராக விளங்குவீர்களா?
கஷ்டங்களிலின்று விடுபட முடியுமா?

போன்ற பலதரப்பட்ட கேள்விகளுக்கு விடைகாணவும் மற்றும் வியாபார ஸ்தலங்கள், வீடு,வாகனங்களுக்குலட்சுமீகரமான பெயரிடவும் தொடர்புகொள்ளுங்கள்.

## எண் ஜோதிடர்

மேபா செந்தூர் ஜுவலேர்ஸ்,
பஸ் நிலையம் முன்பாக,
அச்சுவேலி

(6650)

## புரோட்டீன் நிறைந்த புரோட்டீனெக்ஸ்® பக்கெட் ஒன்றை இன்றே வாங்குங்கள்!




Grant BJK&E PFL 1158

புரோட்டீனெக்ஸ்® 56% தாவர புரோட்டீனும், உடலுக்கும் ஆற்றலுக்கும் அவசியமான விற்றமின்களும் தாதுப்பொருட்களும் அடங்கியது.

புரோட்டீனெக்ஸ்®
நீங்கள் நாளாந்தம் இழக்கும் சக்தியை மீட்டுத் தருகிறது.

சில்லறை விலை ரூபா 68/55
125 கிறும்

Pfizer

®பைசர் கூட்டுத்தாபனத்தின் வர்த்தக அடையாளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமலை மாவட்ட தளபதி

### லெப். கேணல் புலேந்தி அம்மான்

புலேந்தி அம்மான் மீண்டும் பிறப்பானோ!
திருமலை பெற்றெடுத்த தீரனே!
வீரவேங்கையாய் விளையாடிய காலம்
தமிழ்த் தாயின் முதல் அத்தியாயம்
நீயில்லாத குறை இப்போது
வெளியாகத் தெரியுதப்பா!
புலேந்தி அம்மான் வருகை கண்டால்
புலரிக்கும் எவர் மனமும்
மீண்டும் பிறப்பானோ எங்கள் புலேந்தி
அம்மான்-

அண்ணர், அண்ணி.
குடும்பத்தினர்.
(6926)

## மேலும் தாமதமாகலாம்

கொழும்பு, அக்.5

ஜீ.சி.ஈ. சாதாரணதர விசேட பரீட்சையின் முடிவுகள் வெளியாவதில் மேலும் தாமதம் ஏற்படலாம் என அறிய வருகிறது.

அக்டோபர் மாதம் 15 ஆம் திகதிக்கும் 30 ஆம் திகதிக்கும் இடையிலேயே முடிவுகள் வெளியாகலாம் என நம்பப்படுகிறது. (உ-9)

## ஆசிரியர் பெற்றோர் உறவு கல்வி வளர்ச்சிக்கு உதவும்

கொடிகாமம் அக் 5

''ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இடையில் உள்ள நெருக்கமான உறவு கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்''

இவ்வாறு மிருசுவில் வடக்கு அ. த. க பாடசாலைஅபிவிருத்திச் சபை கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் பாடசாலையின் அதிபர் திரு சி. சின்னராசா கூறினார்.

பின் வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. சி. சின்னராசா, உபதலைவர்: திரு க. இராசரத்தினம், செயலாளர்: திரு. த. சிவப்பிரகாசம், உப செயலாளர் திரு. க. சுப்பிரமணியம், பொருளாளர்; திரு. க. பாலசிங்கம்.

இவர்களுடன் மேலும் எட்டுப்பேர் கொண்ட செயற் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

(ஒ-சி-75)

### விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், அக்.5

வாதரவத்தை ஸ்ரீ விக்கினேஸ்வரா சன சமூக நிலைய நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு. கு. தெய்வேந்திரம் உப-தலைவர் திரு. க. சத்தியசீலன், செயலாளர் திரு. கு. பசுபதிதாசன், உப-செயலாளர் திரு. க. மோகனதாசன், பொருளாளர், திரு. த. சந்திரகுமார், பத்திராதிபர் திரு. து. யோகேஸ்வரன்

(ச)

## ஓராண்டு நினைவஞ்சலி



கடற்புலிகளின் தலைவன்

### மேஜர்-R. P. G. அப்துல்லா
(நகுலகுமார்)

மண்ணில்- 20 - 7 - 1963

மனதில்- 5 - 10 - 1987

கொக்குளாய்-குச்சவெளி-மன்னார்-யாழ் நகர்-வடமராட்சிக் களங்களிலே தன்னேரில்லாத போர்தொடுத்து வேங்கைஅணி மின்னிக் கொழிக்க விறல்வீரங் காட்டியவன் அடுத்தவனின் சூழ்ச்சியினால் அவனியதை நீத்தானே.

குடும்பத்தினர்
நண்பர்கள்
(6 36)

## யாழ் தொலைபேசிச் சேவை புனரமைக்கப்படும்

### பல திட்டங்களில் ஒன்று தெரிவு

யாழ்ப்பாணம், அக் 5

யாழ்ப்பாணத்துக்கான தொலைபேசிச் சேவையை புனரமைப்பதற்கான திட்டம் ஒன்றை தொலைபேசித் தொடர்புகள் அமைச்சு தெரிவு செய்திருக்கிறது.

இந்தத் திட்டம் விரைவில் அரசாங்கத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படும். இந்தத் திட்டத்தை அடுத்த வருடம் ஆரம்பப் பகுதியில் ஆரம்பித்து டிசம்பர் மாதமளவில் பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

யாழ் தொலைபேசிச் சேவையை புனரமைப்புச் செய்வதற்கான பல திட்டங்கள் தொலைபேசித் தொடர்புகள் அமைச்சின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டன.

இந்தத் திட்டங்களை எல்லாம் கவனமாகப் பரிசிலனை செய்த அமைச்சு அதிகாரிகள் விரைவில் அமுல்படுத்தக் கூடிய திட்டம் ஒன்றை அண்மையில் தெரிவு செய்தனர்.

விரைவில் இது அரசாங்கத்தின் அங்கீகாரத்துக்கென சமர்ப்பிக்கப்படும்.

புதிய திட்டத்தின் கீழ் நூற்றுக்கும் மேற்பட்ட தொலைபேசி இணைப்பு வசதிகள் வழங்கப்படும் என்று தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்துக்கான தொலைபேசிச் சேவையை புனரமைக்கும் திட்டத்தின் கீழ் கிளிநொச்சிக்கான தொலைபேசிச் சேவையும் நிர்மாணிக்கப்பட இருக்கிறது.

கிளிநொச்சி தொலைபேசித் திட்டம் சம்பநதமாக விரிவான அறிக்கை ஒன்றைத் துரிதமாகத் தயாரித்துத் தரும்படி சப்பந்தப்பட்ட அதிகாரிகளை தொலைத் தொடர்புகள் அமைச்சு கேட்டிருக்கிறது.

(இ-ஐ)

## முதலாவது ஆண்டு கண்ணீர் அஞ்சலி





உயர்திரு
### த. சோர்ணலிங்கம்

தோற்றம்: 30 - 06 - 1920
அகால மரணம்: 17-10-1987

திருமதி
### லக்சுமிப்பிள்ளை சோர்ணலிங்கம் (பூபதி)

தோற்றம்: 10 - 03 - 1930
அகால மரணம்: 17-10-1987

திதி: 05-10 1988

எம்மைப் பெற்று மிகவும் அன்போடும் பாசத்தோடும் வளர்த்து வேண்டிய நேரத்தில் வேண்டியதெல்லாம் உவந்தளித்த எங்கள் அன்புத் தாய் தந்தையரே! நீங்கள் இருவரும் ஒரே நேரத்தில் எம்மைவிட்டுப் பிரிந்த போது உங்கள் அன்புப் பிள்ளைகள் ஒருவரும் உங்கள் கிரியைகளில் பங்கு கொள்ள முடியாமல் போனதை நினைக்கும் போது எமது நெஞ்சம் வேதனையால் துடிதுடிக்கின்றதே! உங்களைப் பிரிந்த துயரத்தை எங்களால் மறக்க முடியவில்லையே! உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
அன்பு மகன் - மணிமாறன் (வாசன்)
மருமகள் அனுராதா, பேரப்பிள்ளைகள் - சிந்து, கமல்.

'அன்னை இல்லம்'
உரும்பராய் தெற்கு, உரும்பராய்.
(7118)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### செல்வி கிரிஷாந்தி இராஜலிங்கம்

(வேம்படி மகளிர் கல்லூரி, 1990 விஞ்ஞானப் பிரிவு)


மலர்வு: 22. 12. 1971 உதிர்வு: 05- 09 1988

அச்சுவேலியின் அருந்தமிழ்ச் செல்வி
மெச்சும் அருங்கலை மேன்மையை உணர்ந்து
பழுதறக் கற்றுப் பண்புடன் வாழ்ந்து
விழுமிய புலமைப் பரிசிலும் பெற்றாய்
வேம்படி வந்து விரும்பியே கற்றாய்
நாம் சிறந்த இனிய நண்பியும் ஆனாய்
சாரணீயத்தின் தத்துவம் உணர்ந்து
பூரண குடமெனப் பொலிந்த பூவே
சோதனை வந்தது சோதனை இழந்தோம்
வேதனை மிசக வேளையில் எல்லாம்
செல்லடி பட்டு சிதறு நின்னுடல்
பொல்லா ஊர்தியால் பொதியாய்ப் போன நீ
அந்தோ! இந்த அவலம் நம்மண்ணில்
பிறந்தார் செய்த வல்வினை யன்றோ
யாரிடம்சொல் வோம்யார்க்கெடுத் துரைப்போம்
பாரிடம் விட்டு பறந்து விட்டாயே
வானிலே சான்றாய் வாழ்ந்து வேடிக்கை
ஈன வையகத்தை ஏனோ பார்க்கிறாய்
ஈன்றோர் படுதுயர் எண்ணுகின் றாயோ
சான்றோர் தளர்வுறல் கண்டும் தவிராய்
உன்தோழியர் ஈங்கு உறுதுயர் காணாய்
வானகத் தோழிநீ வருக எம் முன்னே
சாந்தி சாந்தியென தவிப்பவர் முன்னே
சாந்தியாய் வந்தே சாந்தியைத் தருவாய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்

வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
1990 பிரிவு மாணவர்கள்.
(6929)

## ஆண்டாண்டு தோறும் . . .



### திருநாவுக்கரசு ராஜ்மோகன்

கண்ணில்:- 08 07 1965 கருத்தில்:- 16- 10 1987

எங்கள் இதயத்தின் எண்ணமாய் வண்ணத் திருவுருவாய் வந்தவனே! ராசனே! உன் மோகனப் புன்னகையும் சொல் நயமும் நீ இல்லாத போதும் இதயக் கடலில் மிதக்கிறது. நீ இறந்து ஓராண்டு சென்றாலும் எங்கள் உள்ளத்தின் ஓரங்களில் நீக்கமற நிறைவாய்.

தாய். தந்தை,
சகோதரர், மாமன்மார்
மைத்துனர்மார், உறவினர்

புங்குடுதீவு 9
(6930)

## 2 ஆம் வருட நினைவஞ்சலி

கீரிமலை

### திரு. நாகலிங்கம் சுப்பிரமணியம்

(இளைப்பாறிய, மாவட்ட சுகாதார பரிசோதகர்)

தோற்றம் 17-6-1922 மறைவு 28-9-1986

திதி 5 10 1988

எங்கள் இதயத்தில் இன்றும் கொலுவிருக்கும் அன்புத்தெய்வமே பாசத்தின் பிறப்பிடமாய் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் வாழ்ந்தீர். எமது உயர்விற்கு ஊன்றுகோலாக இருந்தீர். உமது இனிய நினைவுடன் வாழ்கிறோம்.

உமது ஆத்மா சாந்தியடைய தினமும் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள.

லட்சுமி வாசா
கீரிமலை
(7127)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





### கந்தையா சிவகுருநாதன்

ஆண்டவன் படைப்பு: 22.11.1952
அநியாய அழிப்பு: 17.10.1987

### சிவகுருநாதன் காண்டீபன்

ஆண்டவன் படைப்பு: 27.04.1983
அநியாய அழிப்பு: 17.10.1987

திதி: 05. 10. 1988

எமது அன்புத் தெய்வமே!

எங்கள் கண் முன்னாலே உங்களிருவரையும் காலன் பறித்தானே, என்னையும் பிள்ளையையும் எல்லா உறவினர்களையும் தவிக்க விட்டு எங்குதான் சென்றீர்களோ? நீங்கள் எங்களுடன் இல்லாத வாழ்வை எங்களால் என்றுமே தாங்கமுடியாமல் இருக்குதையா.

மகனே,
சிந்தை குளிர வந்து சிறப்பாகச் சிரிக்கவைத்து
விந்தைகள் பல காட்டி எம்மை மகிழ வைத்தாய் இன்று—
தந்தையுடன் இத் தரணியை விட்டு
எங்கு சென்றாய் எம் மைந்தா.

என்றும் பிரிவால் துயருறும்,
மனைவி. மகள்,
ராசாண்ணை குடும்பத்தினர்,
தாய், தங்கை
பெரியப்பா குடும்பத்தினர்:

'துஷ்யந்தி இல்லம்'
பொற்பதி றோட்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(7128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வியல் மொழி**

**குறள்:**
விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்
ஒட்டன்றோ வன்க ணவர்க்கு.

**பொருள்:**
பகைவரைச் சினந்து நோக்கிய கண், அவர் வேலைகொண்டு எறிந்த போது மூடி இமைக்குமானாலும், அது வீரமுடையவர்க்குத் தோல்வி அன்றோ!

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல - 292/2 நாவலர் வீதி. தொலைபேசி 24805
யாழ்ப்பாணம் 22078
05-10-1988 • வெ இல 88

# நினைவஞ்சலி மாதம்

கடந்த வருடம் அக்டோபர் மாதம் வடக்கு, கிழக்குத் தமிழ் மக்கள் மறக்க முடியாத காலம் அதிலும் யாழ்ப்பாணக் குடாநாடு அதற்கு முன்னர் கண்டிராத அனர்த்தங்களையும், அநியாயச் சாவுகளையும், வன்செயல்களையும் கண்ட மாதம் 87 அக்டோபரே. வீட்டுக்கு வீடு மரண ஓலம் கேட்டதும், பாடுபட்டுத் தேடிய உடைமைகள் பெருமளவில் நாசமாகியதும் 1987 அக்டோபரில் தான். 1983 கறுப்பு ஜூலையை விட மோசமாகக் கொள்ளப்பட வேண்டியது அக்டோபர் 87.

அனர்த்தங்களில் உயிர் நீத்தவர்களை நினைந்து குடும்பத்தவர்களும், உறவினர்களும் அஞ்சலி செலுத்துவதும் சமயக் கிரியைகளை நடத்துவதும் இப்போது நடந்து வருகிறது. அனர்த்தங்களில் உயிர்நீத்த ஆயிரமாயிரம் மக்கள் பேரில் ஆண்டுத் திதிகளும், ஞாபகார்த்தப் பூசைகளும் இன்னும் மூன்று நான்கு வாரங்களுக்குத் தொடரும்.

அக்டோபரில் உயிர்நீத்த மக்களுக்கு மட்டுமன்றி, மண்ணுக்காக உயிர் ஈந்த போராளிகளுக்கும் மக்கள் அஞ்சலி செலுத்துகிறார்கள்; செலுத்துவார்கள். வல்வை திருவில் மைதானத்தில், பன்னிரண்டு போராளிகளின் நினைவாக இன்று நினைவுத் தூபியும் பூங்காவும் திறக்கப்படுகின்றன. தங்கள் மக்களுக்காக, மண்ணுக்காக உயிர் ஈந்த போராளிகள் பெயரை ஞாபகப்படுத்திக் கொள்ளவும், அஞ்சலி செலுத்தவும் மக்கள் பின்னிற்பதில்லை. அது அவர்களது விருப்பம் எவரும் அதனைத் தடை செய்யவோ அல்லது தடுக்கவோ உரிமையில்லை.

போராளி ஒருவன், அவன் எந்த அணியைச் சேர்ந்திருந்தாலும், நாட்டுக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்தால் அவன் மக்களுக்கு உரியவனாகிறான். அதன் பின் அவரவர் மனவிருப்பபடி அவனுக்கு அஞ்சலி செலுத்துவதும் நினைவுத்தூபி எழுப்புவதும் நினைவாலயம் கட்டுவதும் மக்களுக்கு உள்ள உரிமை; கடமை என்று சொல்வதிலும் தப்பில்லை.

பலாலி முகாமில் உயிர்நீத்த பன்னிரண்டு போராளிகளையும் தொடர்ந்து களத்தில் உயிர்ஈந்த நூற்றுக்கணக்கான போராளிகளையும் மக்கள் நினைவு கூர்வர். அனர்த்தங்களில் உயிர்நீத்த பொதுமக்களும் நினைவு கூரப்படுவர்.

அக்டோபர் மாதத்துக்கு குடாநாட்டின் நினைவஞ்சலி மாதம் என்று பெயரிட்டாலும் பொருந்தும்.

உயிர் நீத்தவர்களின் தியாகம் அர்த்தமுள்ளதாக இருக்கவேண்டும் என்றால் நினைவஞ்சலிகள் அமைதியாகக் கொண்டாடப்பட வேண்டும்; அமைதியைப் பேணும் விதத்தில் அவை கொண்டாடப்பட வேண்டும் வன்செயலைத் தூண்டும்விதத்தில் அமையக்கூடாது. இவ்வாறு அமைதிப் படையினர் குடாநாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். அது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய வேண்டுகோள்.

தியாகி திலீபனின் நினைவஞ்சலி வாரத்தில் மக்கள் அமைதியைப் பேணியே தமது அஞ்சலியைச் செலுத்தினார்கள் வன்செயல்கள் எதுவும் நடந்ததாகத் தகவல்கள் இல்லை அதே பண்பையும் பாங்கையும் குடாநாட்டு மக்கள் தொடர்ந்தும் அக்டோபர் - நினைவஞ்சலி மாதத்திலும் கடைப்பிடிப்பார்கள் என்பது எமது நம்பிக்கை

தமிழ் மக்கள் எப்போதுமே அமைதி விரும்புபவர்களே வன்செயல்களை வேண்டாத விதத்தில் விலைக்கு வாங்குபவர்கள் அல்லர். ஆகையால் இந்த நினைவஞ்சலி மாதம் முழுவதிலும் அவர்கள் அமைதியைப் பேணுவார்கள் என நம்பலாம்.

வடக்கு, கிழக்கில் அமைதி நிரந்தரமாக வேண்டுமெனில் இந்திய அமைதிப் படை அறிக்கையில் கூறப்பட்டிருப்பது போல அமைதியை உருவாக்குவதற்கான பாலங்கள் கட்டப்படவேண்டும். அதாவது ஈழத் தமிழ் மக்களுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் உள்ள இடைவெளி நிரப்பப்பட வேண்டும். அந்தப் பாலங்களைக் கட்டுவதற்கான காலம் இன்னும் கடந்து போய்விடவில்லை என்றே தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

இந்தியாவுக்கும் நாம் இன்றும் நேசக்கரம் நீட்டுகிறோம். எமது கரத்தை அது நம்பிக்கையுடன் பற்றிக் கொள்ளலாம் என பருத்தித்துறையில் நடந்த தியாகி திலீபனின் நினைவுத்தூபி திறப்புவிழாவில் திரு. க. சிவானந்தசுந்தரம் கூறியதை அதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

தாம் சிறைப்பிடித்த இந்திய அமைதிப் படை ஜவான்களை, ஆயுதங்களோடுவிடுவித்த தமிழீழ விடுதலைப் புலிகளின் நல்லெண்ணத்தைச் சரியாகப் புரிந்து கொண்டால் அதுவும் ஓர் உதாரணமே.

நேசக்கரங்கள் இருதரப்பிலும் நீண்டு அமைதிப்பாலம் உருவாகினால் அதனை யார் தான் வேண்டாமென்று சொல்வர்!

## கனடாவில் பொதுத் தேர்தல்

கனடா நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் எதிர்வரும் நவம்பர் 21 ஆம் திகதி நடைபெறும் என்று பிரதமர் பிரையன் மல்ரோனி நேற்று அறிவித்தார்

திடீர் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த கனடா அரசு யோசித்து வருவதாக கூறப்பட்டு வந்த ஊகங்களுக்கு இதன்மூலம் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது.

1989 பொதுத் தேர்தல்;

# இந்திரா காங்கிரஸுடன் கூட்டு இல்லை; இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு!

புதுடில்லி அக்- 4 இந்திரா காங்கிரஸுடன் கூட்டுச் சேரப் போவது இல்லை என்று மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவா இ எம் எஸ் நம்பூதிரிபாத் அறிவித்திருக்கிறார்

ஏழு கட்சிகள் அமைத்துள்ள தேசிய முன்னணிக்கு எதிராக இடதுசாரி கட்சிகளுடன் சேர்ந்து இந்திரா காங்கிரஸ் புதிய கூட்டணி ஒன்றை உருவாக்க வேண்டும் என்று காங்கிரஸின் பழம் பெரும் தலைவர் கமலபதி திரிபாதி பிரதமர் ராஜீவுக்குக் கடிதம் எழுதியிருந்தார் அல்லவா? அதற்குப் பதிலளிக்கும் முகமாகவே திரு. நம்பூதிரிபாத் இப்படி அறிவித்தார்,

இந்திரா காங்கிரஸை முதல் எதிரியாக மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் கருதுகிறது ஆகவே காங்கிரஸுடன் கூட்டுச் சேரவே மாட்டோம்; இப்படி நம்பூதிரிபாத சொன்னார்

## முன்னாள் மந்திரி மக்வானா வி. பி. சிங் கட்சியில் சேர்வு

இதனிடையில் மத்திய அமைச்சரவையில் இருந்து இராஜினாமாச் செய்த திரு. மக்வானா, திரு வி பி. சிங் தலைமையிலான ஜனமோர்ச்சாவில் சேர்ந்து விட்டார்.

பிரதமர் ராஜீவ் காந்தியுடன் கொண்ட கருத்து வேறுபாடு காரணமாக திரு மக்வானா அமைச்சர் பதவியை இராஜினாமச் செய்தார். (எ)

## வாஞ்சி ரயில் நிலையம்; பிரதமர் ராஜீவ் அறிவிப்பு

சென்னை. அக். 4 திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மணியாச்சி ரயில் நிலையம் இனி வாஞ்சி- மணியாச்சி ரயில் நிலையம் என்று அழைக்கப்படும்

பிரதமர் ராஜீவ் காந்தி இதனை நேற்று அறிவித்தார். மூன்று நாள் பயணத்தின் ஒரு கட்டமாக பிரதமர் திருநெல்வேலி சென்றார்.

வாஞ்சிநாதன் 1911 ஆம் ஆண்டு மணியாச்சி ரயில் நிலையத்தில் வைத்து ஆங்கில கலெக்டர் ஆஷ் என்பவனைச் சுட்டுக்கொன்று விட்டு பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்தார். இச்செயலுக்காக வாஞ்சிநாதனைக் கௌரவிக்கும் முகமாக இப்பெயர் சூட்டப்பட்டது (எ)

## பணயக்கைதியான இந்தியப் பேராசிரியர் 20 மாதங்களின் பின்னர் விடுதலை

பேரூட், அக் 4 20 மாதங்களுக்கு மேலாக லெபனனில் அரபுக் கெரில்லாக்களினால் பணயக் கைதியாக வைக்கப்பட்ட இந்தியப் பேராசிரியர் ஒருவர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

1987 ஜனவரியில் இவருடன் மூன்று அமெரிக்கப் பேராசிரியர்களும் பேரூட் பல்கலைக்கழகத்தில் வைத்து கடத்தப்பட்டனர்.

இந்தியப் பேராசிரியர் மிதிலேஷ்சிங் அமெரிக்காவை வசிப்பிடமாகக் கொண்டவர்.

பலஸ்தீன மக்களின் கிளர்ச்சிக்கு அமெரிக்காவின் ஆதரவைத் தேடும் நல்லெண்ணத்துடன் இவர் விடுவிக்கப்பட்டதாக கெரில்லாத்தரப்பில் அறிவிக்கப்பட்டது.

சிரிய அரசு. பேராசிரியரை லெபனனில் உள்ள அமெரிக்கத் தூதரிடம் கையளித்தது.

### ஆயுதம் ஒப்படைப்பு

கல்கத்தா, அக் 4 கூர்க்காலந்து தேசிய விடுதலை முன்னணிப் போராளிகள் ஆயுதங்களை ஒப்படைக்கும் பணி நேற்று டார்ஜிலிங்கில் ஆரம்பமானது.

மத்திய அரசு, மாநில அரசு, கூர்க்காலந்து முன்னணி ஆகியவற்றுக்கு இடையே ஏற்பட்ட முத்தரப்பு உடன்படிக்கை ஒன்றைத் தொடர்ந்து, இந்த ஆயுத ஒப்படைப்பு ஆரம்பமானது

இம் மாதம் 14 ஆம் திகதி வரை ஒப்படைப்பு நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

### பர்மாவில் மோதல்

ரங்கூன், அக் 4 கிளர்ச்சிக்காரர்களினால் கைப்பற்றப்பட்ட சிறிய நகரம் ஒன்றை பர்மா இராணுவம் மீண்டும் கைப்பற்றியதாக அறிவிக்கப்படுகிறது.

நகரை மீட்டு எடுக்க இராணுவம் நடத்திய தாக்குதலில் 250 பேர் வரை உயிரிழந்தனர்.

இதனிடையில் எல்லைப் புறங்களில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினரில் பெரும் எண்ணிக்கையானோர் ரங்கூனுக்குக் கொண்டு வரப்பட்டனர். (எ)

### கப்டனாக வெங்சாகர்

புதுடில்லி. அக் 4 ஷார்ஜா கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளும் இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக திலிப் வெங்சாகர் நியமிக்கப்பட்டார்.

டாக்காவில் நடைபெறவுள்ள ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ள இந்திய அணியின் கப்டனாகவும் இவரே இருப்பார்.

பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுத்தது போன்ற கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் விதி முறைகளை மீறியமைக்காக கடந்த ஆறுமாத காலமாக இவர் போட்டிகளில் பங்குபற்றுவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. (ஒ.எ)

கல்வி பெறச் செல்லும்

# இலங்கையரில் 50 சதவீதமானோர் அமெரிக்காவிலேயே தங்கி விடுகின்றனர்

கொழும்பு, அக் 5 அமெரிக்காவுக்கு கல்வி பெறச் செல்லும் இலங்கையரில் 50 சத வீதமானோர் தாயகம் திரும்பாமல் அங்கேயே தங்கி விடுகின்றனர்.

இத் தகவலை கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரி றிச்சாட் ஷெர்மன் தெரிவித்தார்.

அவர் மேலும் சொன்னதாவது;

வெளிநாட்டு மாணவரை படிப்புக்காக அனுமதிக்கும் விஷயத்தில் அமெரிக்க அரசு ஒரு விஷயத்தை கவனமாகப் பார்க்கிறது,

அமெரிக்காவில் அந்த மாணவர் பெறும் கல்வி அவரின் சொந்த நாட்டுக்கு பயன்படுமா என்பதே.

ஆனால் அந்த மாணவர் தேவையான கல்வியறிவைப் பெற்றவுடன் அமெரிக்காவிலேயே தங்கி விடுகிறார்கள்.

அமெரிக்க அரசின் இந்த நோக்கம் நிறைவேறுவதில்லை.

இப்படி அவர் மேலும் சொன்னார். (இ-எ)

## எமது கோரிக்கைகளை மழுங்கடிப்பதே நோக்கம்

## மக்கள் வங்கிச் சலுகைகள் குறித்து அடகு வைத்தோர் சங்கம் கருத்து

யாழ்ப்பாணம், அக் 5 மக்கள் வங்கி வழங்கியுள்ள சலுகைகள் உண்மையான சலுகைகள் ஆகா. இவை எமது நியாயமான கோரிக்கைகளை மழுங்கடிக்கும் நோக்கத்துடன் தயாரிக்கப்பட்டவை.

யாழ்ப்பாணம் நகைகளை அடகு வைத்தோர் சங்கச் செயலாளர் திரு. அ. இ. தியாகராசா, "உதயனுக்கு" அனுப்பியுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்

அறிக்கையில் மேலும் கூறப்படுவதாவது:-

நாம் எமது சட்டவல்லுநர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களின் ஆலோசனையைப் பெற இருக்கிறோம்.

மிகவிரைவில் கூட்டப்படும் விசேஷ பொதுக் கூட்டத்தில் இந்த ஆலோசனைகள் முன் வைக்கப்படும்.

ஆகவே இக் கூட்டத்தில் முடிவு எடுக்கும் வரை அங்கத்தவர்கள் மக்கள் வங்கியில் பணம் செலுத்தாமல் இருக்கும் படி கேட்கின்றோம்.

இப்படி அறிக்கை கூறுகிறது. (ச)

### மருத்துவபீட விரிவுரைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் அக் 5 யாழ் பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மருத்துவபீட மாணவர்களுக்கான விரிவுரைகள் இன்று ஆரம்பமாகின;

அன்று மொத்தம் 93 மாணவர்கள் விரிவுரைகளுக்கு சமுகம் தந்திருந்தனர்.

அவர்கள் அனைவரும் யாழ் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட மாணவர்களாக 1987 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது

இதே வேளையில். இரண்டாம் வருட மருத்துவபீட மாணவர்களுக்கான விரிவுரைகளும் ஆரம்பமாகியுள்ளன. 54 மாணவர்கள் இரண்டாம் வருட விரிவுரை வகுப்புக்களுக்கு சமுகமளித்திருந்தனர் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன (ஒ- ஐ)

## சுதந்திரக் கட்சியுடன் சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகள் பேச்சு நடத்துகின்றன

கொழும்பு, அக் 5 ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவை ஆதரிப்பது குறித்து லங்கா சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் சுதந்திரக் கட்சியுடன் பேச்சுக்களை நடத்துகின்றன என்று தெரிய வருகிறது.

இப்பேச்சுக்களின் முடிவில்தான் இலங்கை மக்கள் கட்சி ... முடிவை அறிவிக்கும் என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

மாஸ்கோவில் இருந்து கிடைத்த விசேஷ தகவல் ஒன்றைத் தொடர்ந்தே கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திரக் கட்சியுடன் பேச்சு நடத்துவதாக கம்யூனிஸ்ட் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ - எ)

### திரிபோச

கோப்பாய் சுகாதார அத்தியட்சகர் பிரிவில் கடந்த சனிக்கிழமை குழந்தைகளுக்கான "திரிபோச" வழங்கப்பட்டது. (இ- 72)

பாதிக்கப்பட்டோருக்கு

## விண்ணப்பப்படிவங்கள் வழங்குவது தொடர்பான வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம் அக்.5 கடந்தவருட இராணுவ நடவடிக்கை களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கும் வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் இந்த வேலை நடைபெறுகிறது.

பாதிப்படைந்த குடும்பங்களுக்கு அந்தப் பகுதி கிராம சேவையாளர் ஒவ்வொரு கார்ட்' வழங்குவார். பின்னர் குறிப்பிட்ட திகதி ஒன்றில் குறிப்பிட்ட இடத்தில் வைத்து கிராமசேவையாளர் பிரிவுக்கான விண்ணப்பப் படிவங்கள் வழங்கப்படும்.

மேற்கூறிய 'கார்ட்'டை உபயோகித்து அந்த விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

'கார்ட்'டில் பெயர் உள்ளவர்கள் மட்டுமே சென்று இந்த விண்ணப்பப் படிவத்தைப் பெறலாம்.

வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை உடனடியாகப் பூரணப்படுத்தி திருப்பிக்கொடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (இ- க)

### கிறிஸ்தவ கல்லூரி முதலிடம்

கோப்பாய் கொத்தணி அமைப்புக்கு இடையே நடத்தப்பட்ட இசை இயல். நாடகப் போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிக இடங்களைப் பெற்று முதன்மையாகத் திகழ்ந்தது. (இ - 72)

## சாரண குழுத் தலைவியர் பயிற்சி ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம் அக் 5 எதிர்வரும் 8-ஆம் 9 ஆம் திகதிகளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற இருந்த யாழ் மாவட்ட சாரண குழுத் தலைவிகளுக்கான பயிற்சி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

பயிற்சி நடைபெறுவதற்கான புதிய திகதி பின்பு அறிவிக்கப்படும் என்று யாழ் மாவட்ட சாரணிய ஆணையாளர் திருமதி ரி அரியரத்தினம் தெரிவித்தார். (இ)

### சுட்டுக் கொலை!

கோப்பாய் அக் 5 சிறுப்பிட்டியில வசந்தன் என்றழைக்கப்படும் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். (இ 72)

### லூட்லண்ட்ஸ் ஹவுஸில் ஆலோசனை

கொழும்பு, அக் 5 எட்டுக்கட்சிகள் கூட்டணித் தலைவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை 'லூட்லண்ட்ஸ் ஹவுஸி'ல் கூடி பொது வேலைத் திட்டம் பற்றி ஆராய்ந்தனர்,

நான்கு மணித்தியாலங்கள் வரை இந்த ஆலோசனை இடம்பெற்றது

திங்கள் மீண்டும்இந்த ஆலோசனை தொடரும் என்று வெள்ளிக்கிழமை கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு குமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (இ-எ)

### சுவீகரிப்பு சட்டம் ரத்தாகும்

கொழும்பு அக்- 5 வர்த்தக நிலைய சுவீகரிப்புச் சட்டம் ரத்துச் செய்யப்படவிருக்கிறது.

இது சம்பந்தமான சட்ட மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர் காலத்தில் நாட்டின் சுதந்திரப் பொருளாதாரத் திட்டத்தில் தனியார் துறை பங்கெடுப்பதை உறுதிப் படுத்த சில வழி காட்டலை சர்வதேச நாணய சபை இலங்கை அரசுக்கு அனுப்பியிருந்தது

அதற்கிணங்கவே இந்த நடவடிக்கை என்று தெரிகிறது.

### 'சிறு கைத்தொழில் மூலம் இளைஞருக்கு வேலை வாய்ப்பு'

யாழ்ப்பாணம், அக் 5 'ஒரு கிராமத்தின் அபிவிருத்தி அக் கிராமத்திலுள்ள மூலவளங்கள் சிறப்பாகப் பயன்படுத்தப் படுவதிலேயே தங்கியுள்ளது. கிராம மட்டத்திலுள்ள மூலவளங்களை பயன்படுத்துவதன் மூலம் சிறு கைத்தொழில்களை உருவாக்கி கிராம மட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்குவதன் மூலம் வேலையில்லாது இருக்கும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க முடியும்.

அண்மையில் நாவற்குழி கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தலைவர் திரு சோ. சடாச்சரம் தலைமையில் நடைபெற்ற வருடாந்த பொதுக் கூட்டத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு இ. பராஜசேகரம் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் ; கிராம மட்டத்தின் அபிவிருத்தி யூனிசெப நிறுவனம் பெருமளவு பங்கை வகிக்க உள்ளது இந்நிறுவனத்தின் உதவி கிடைக்கும் மக்களின் வாழ்க்கைத் தர உயர்விற்கும் வழி ஏற்படும் என்றார். (ஒ)

### வீடு செல்ல மறுப்பு

மட்டக்களப்பு இந்தியப்படையின் புனர்வாழ்வு முகாமிலிருந்து விடுதலையான இளைஞர்களில் இதுவரை 9 பேர் பாதுகாப்புக் கருதி தமது வீடு செல்ல மறுத்துள்ளனர்.

அவர்கள் தொடர்ந்து முகாமில் தங்கி இருப்பதாக மட்டக்களப்பு பிரஜைகள் குழுச் செயலாளர் திரு செழியன் பேரின்பநாயகம் தெரிவித்தார். (ஒ-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள்
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# உதயன்

05 - 10 - 1988 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
• தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
• நெகடிவ் [PROCESSING] செய்தல் இலவசம்
• சிறப்பான வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK FUJI KONICA
TUDOR FORTE B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள

## 12 போராளிகளுக்கும்--------

(1ம் பக்கத் தொடர்ச்சி) ங்கா இராணுவம் முறுக்கிப் பிடிக்க, கூலிப்பட்டாளங்கள் கால்களைப் பிடிக்க, தமிழ்த் தாயின் வயிற்றின் மீது தனது பூட்ஸ் கால்களை அழப்பதித்து கருவைச் சிதைக்க முனைந்து நிற்கின்றது இந்தியா.

எத்தனையோ சோதனைகளைத் தாண்டி வந்த தமிழ்த் தாய்க்கு இது பெரிய சோதனை.

கரு தப்புமா? குழந்தை பிறக்குமா?

பிறக்கக்கூடாது என்பதில் இந்தியாவுக்கு எவ்வளவு அக்கறை?

குழந்தை பிறந்தால் அதை உங்களால் வளர்க்க முடியாது, பாதுகாக்க முடியாது. எனவே நாம் றிமோட் கொன்ரோலில் (தொலைக் கட்டுப்பாட்டில்) இயங்கும் ஒரு பொம்மைக் குழந்தையைத் தருகின்றோம்.

அது அழும், அது சிரிக்கும், அதை உங்கள் மாமா ஸ்ரீலங்காவும், பாட்டன் நானும் இயக்குவோம். அதைப் பாதுகாக்கும், பராமரிக்கும் கவலைகூட உங்களுக்கு இல்லை. இதை ஏற்று தமிழீழக் கருவை அழித்து விடுங்கள் என இந்திய அரசு அடித்து, உடைத்து எமை அழித்து, பெண்களை மானபங்கப்படுத்தி எமக்கு அறிவுரை செலுத்துகின்றது.

ஆகா! இந்திய அரசுக்கு எம்மீது எவ்வளவு கருணை? எமது தாய்படும் பிரசவவேதனை போதும். இந்தப் பொம்மைக் குழந்தையை எடுத்துக் கொண்டால் எல்லோருக்கும் நல்லது.

எழுபத்தியேழில் தமிழீழக் குழந்தை பிறக்க வேண்டும் என்று கூறிய கும்பல் மேலே சொன்ன வண்ணம் கூப்பாடுபோடுகிறது.

தேர்தல் எனும் மருந்தைக் கொடுத்து விடுங்கள். தமிழ்த் தாயின் பிரசவ வேதனை அடங்கி விடும், கரு சிதைந்து விடும், பூரண அமைதி ஏற்படும் என இந்திய அரசு உபதேசம் செய்கின்றது.

இது எவ்வளவு பெரிய தத்துவம் என கூலிப்பட்டாளங்கள் பாராட்டுத் தெரிவிக்கின்றன.

பிரசவ வேதனையால் துடிப்பவருக்கு அல்லவா தெரியும் இந்தப் பிரவசத்திற்காக எத்தனை பேர் தியாகம் செய்து வீர மரணம் அடைந்தார்கள் என்பதும், பிரசவம் நடக்கும் என்ற நம்பிக்கையோடும், மகிழ்ச்சியோடும் மரணத்தைத் தழுவிக் கொண்டார்கள் என்பதும்.

தமிழீழ மக்களே!

ஸ்ரீலங்கா அரசு எமக்கு எதிரி இந்திய அரசும் ஜே. ஆர்-ராஜீவ் சாசனத்தை ஆதரித்து நிற்பவர்களும் துரோகிகள்.

விடுதலைப் புலிகள் வரலாற்றில் துரோகிகள் என்றும் மன்னிக்கப்பட்டதில்லை, மன்னிக்கப்படவும் மாட்டார்கள்.

ஜே. ஆர்- ராஜீவ் ஒப்பந்தம் பல தில்லுமுல்லுகள் நிறைந்த சதிக்கூட்டு இதை ஓர் பெரிய உதாரணம் புரிய வைக்கும்.

போராளிகளுக்கு உலகறிய பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. ஆனால் வட கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே இவர்கள் குற்றம் செய்ததாக இலங்கை அரசு கருதினால் போராளிகளைக் கைது செய்யலாம்.

பொது மன்னிப்பு என்றால் என்ன? இந்தச் சொல்லிலே இவ்வளவு குழப்பங்களா? இல்லை, காலத்தின் தேவைக்கேற்ற துரோகங்கள்.

பூஸா முகாமில் இருக்கும் கைதிகள் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஏற்கின்றோம் என்றால் பொது மன்னிப்பு. அதுவும் மிகப் பெரிய போராட்டங்களின் பின்பு தன் சாத்தியம்.

விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படுபவர்க்கு விசாரணையும் இல்லை, விடுதலையும் இல்லை.

பூஸா முகாமிலிருந்து சிலபேர் விடுதலை செய்யப்படுகிறார்கள். பூஸா முகாமிலும் கேவலமாக சில இடங்களில் விடுதலைப் புலிகள் என்ற பெயரில் பலர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். இவர்கள் நிலை என்ன?

இவர்கள் எந்த நாட்டுச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டார்கள்,

சித்திரவதை செய்யப்படுகிறார்கள் காணாமல் போகிறார்கள். கேட்பதற்கு யாருமில்லை-எமது ஆயுதங்களைத் தவிர.

பருத்தித்துறைக் கடலில், பொது மன்னிப்பு அளிக்கப்பட்டவர்கள் என்ற நம்பிக்கையில் நின்ற எமது மூத்த தலைவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்ட போது தாம் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்பினார்கள்.

ஆனால் இந்திய-இலங்கை அரசின் திட்டங்கள் வேறு.

எத்தனையோ ஆண்டுகள், எவ்வளவு பணம் செலவழித்து தமது இராணுவத்தை அழித்து தம்மால் கைது செய்யவோ கொலை செய்யவோ முடியாத தலைவர்கள் தமது கையில், இவர்களைக் கொழும்பு கொண்டு சென்று சித்திரவதை செய்து மகிழ வேண்டும். இந்திய இராணுவம் இலங்கை வந்திருப்பதை வெறுத்து நிற்கும் சிங்கள மக்களைத் திருப்திப்படுத்த வேண்டும். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு கைதிகளாக இருக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினரை விடுதலை செய்ய இவர்களைப் பணயக் கைதிகளாகப் பயன்படுத்தலாம் என ஸ்ரீலங்கா அரசு எண்ணியது. இவர்களைப் பணயமாக வைத்துக் கொண்டு ஜே. ஆர்-ராஜீவ் ஒப்பந்தத்தை நிபந்தனையின்றி புலிகளை ஏற்கப்பண்ணவேண்டும் என இந்திய அரசு எண்ணியது.

பதினேழு பேரும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டவர்கள், தாம் கொழும்பு கொண்டு செல்லப்படுவதை விரும்பவில்லை. அப்படி ஒரு நிலை வந்தால் சயனைற் அருந்துவோம் என்று தெளிவாக இந்திய அரசுக்குக் கூறியிருந்தார்கள்.

விடுதலைப் புலிகள் சொன்னதைச் செய்வார்கள், திலீபனின் உண்ணாவிரதப் போராட்டம் இதை உலக மக்களுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டியிருந்தது.

லெப்டினன்ட்கேர்ணல் புலேந்திரன்-இவன் திருகோணமலை மாவட்டத் தளபதி. இவன் கண்ட போர்க்களங்கள், இவன் சாதித்த சாதனைகள் தமிழீழ மக்களுக்கு புதியவை அல்ல.

முன்னாள் மட்டக்களப்பு மாவட்டத் தளபதியும், பின் அமரத்துவம் அடையும் வரை யாழ் மாவட்டத் தளபதியுமாக இருந்த லெப்டினன்ட் கேர்ணல் குமரப்பா. இவன் செல்லாத போர்முனைகளே இல்லை.

மேஜர் அப்துல்லா, கப்டன் ரகு, கப்டன் நளன், கப்டன் மிரேஷ், கப்டன் பழனி, கப்டன் கரன், லெப்டினன்ட் தவக்குமார், லெப்டினன்ட் அன்பழகன், இரண்டாவது லெப்டினன்ட் றெஜினோல்ட், இரண்டாவது லெப்டினன்ட் ஆனந்தக்குமார்.

இவர்கள் ஒவ்வொருவரினதும் சாதனைகள், இவர்கள் தமிழீழப் போராட்டத்திற்கு ஆற்றியபங்குகள் வரலாறு—சரித்திரம்.

லெப்டினன்ட் கேர்ணல் புலேந்திரன், திருமணம் செய்து ஆறு மாதங்கள்; லெப்டினன்ட் கேர்ணல் குமரப்பா மணம் முடித்து இரண்டு கிழமைகள்.

தமிழீழ இலட்சியத்திற்காக சொந்த விருப்பு, வெறுப்புகளை துறந்து, கொண்ட கொள்கைக்காக உயிர் நீத்த இந்தவீரர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர அஞ்சலியைச் செலுத்துகின்றார்கள்.

அன்பான தமிழீழ மக்களே!

தமிழீழம் அமையாத வரை சிங்களக் குடியேற்றங்கள் தொடரும், அதிகாரமற்ற அதிகாரங்கள் கொண்ட மாகாணசபைகள் மூலம் எமது சுதந்திரம் விலை பேசப்படும், தமிழர் கலாசாரம் திட்டமிட்டு அழிக்கப்படும்.

இராவணன் ஆண்டாலென்ன, இராமன் ஆண்டாலென்ன, நாம் வாழ்ந்தால் போதும் என வாழ்பவர்களை இனங்கண்டுகொள்வோம்

தமிழீழம் என்னும் எமது இலட்சியத்திற்காகத் தொடர்ந்து போராடுவோம் என இவர்களின் நினைவு நாளில் மீண்டும் உறுதி எடுத்துக்கொள்ளுவோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ.)

## ஏனைய இயக்.....

(1ம் பக்கத் தொடர்ச்சி) லைக்காக ஈழப் போராட்டத்தில் எம்மை ஈடுபடுத்திக்கொண்ட நாம் இன்றைய காலகட்டத்தில் மீண்டும்ஒற்றுமைப்பட்டு செயற்படுவதொன்றே தமிழ் மக்களுக்குமகிழ்ச்சி தரும் செய்தி ஆகும்

இந்த ஒற்றுமைக்கான சூழ்நிலை சந்தர்ப்பத்தை பொதுஸ்தாபனங்களும் மக்கள் மன்றங்களும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும், இதனை விடுத்து புலிகளையும், இந்தியப்படையினரையும் மாறிமாறி குற்றம் சுமத்துவதன் மூலம் ஒருபோதும் பிரச்சினைகள் தீர்ந்து விடப் போவதில்லை; அமைதி வாழ்க்கை கிடைக்கப் போவதுமில்லை.

அத்துடன் இயக்கங்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்படுத்தப் படுமாயின் இந்தியப்படையினர் இங்கு தொடர்ந்து நிலைகொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியப்படையினரின் நடவடிக்கைகள் குறித்து மக்களின் முழு ஆதரவும் பலமும் நமக்கு கிடைப்பதில் சந்தேகம் இருக்காது.

எம்மினத்தின் விடிவுக்காக ஆயுதத்தை கையிலே தூக்கிய நாம் இன்று அகிம்சை வழியில் நின்று எம்மினத்தின் உரிமைகளை வென்றெடுக்க ஒரே வழி அனைத்தையும் மறந்து நமக்கிடையேயான ஒற்றுமையை மீளவலுப்படுத்துவதொன்றே

இதற்கு விடுதலைப்புலிகள் உறுதியுடன் முன்வந்து ஏனைய இயக்கங்களுடன் பேச்சில் ஈடுபட வேண்டும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மறுப்பு

30 - 09 - 1988 உதயன் 6 ஆம் பக்கத்தில் சகோதரி, சட்டத்தரணி திரு. குமரேசர் வேலாயுதனின் மனைவி திருமதி வே. பொன்னம்மா விடுத்த அறிவித்தல் தொடர்பாக அறியத்தருவதாவது:-

அந்தஅறிவித்தலில் குறிப்பிட்ட சல்லிய வத்தைக்காணி திருமதி வே பொன்னம்மாவின் அறுதிக்காணி. அவர் என்னை சல்லிய வத்தைக் காணியின் பராமரிட புக்காரனாக நியமிக்கவில்லை. நான் அக்காணியை பராமரிக்கவும் இல்லை. என்னுடையது என உரிமை கொண்டாடவும் இல்லை.

நாகலிங்கம் சபாபதிநாதன்
(1988 - 10 - 03)
கயிலயங்கிரி,
சித்தன்கேணி. (6925)

A/L 89 விஞ்ஞான மாணவர்களுக்கு
ELECTROSTATICS
Thursday 2 - 30 — 4 - 30
ஆசிரியர்: Mr. மணியம் B. Sc. (Hons)
3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

## தீருவிலில் நினைவுத்.....

(1 ஆம் பக்க தொடர்ச்சி) வீர மரணமடைந்த 12 போராளிகளின் குடும்ப உறுப்பினர்கள் 12 குத்து விளக்குகளை ஏற்றி சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்க வேறு போராளிகளின் பெற்றோர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவர்.

தொடர்ந்து கவிதாஞ்சலியும் முக்கிய பிரமுகர்களின் உரையும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து பொது மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்துவர்

விழா முடிவில் சகல பாதைகளுக்கும் போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

### அரியாலை பிரசைகள் குழு

பன்னிரண்டு போராளிகளின் நினைவாக இன்று வல்வெட்டித்துறையில் நடைபெறும் வைபவத்தில் அரியாலை பிரசைகள் குழுவும் கலந்து கொள்ளும்.

இதேவேளையில் அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட தியாகி சந்திரசேகரத்தின் நினைவு நாளை மேற்படி பிரசைகள் குழு எதிர்வரும் 21 ஆம்திகதி அனுஷ்டிக்க இருக்கிறது (ஒ-ஐ-160)

## விடுவிக்கப்....

(1ம் பக்கத் தொடர்ச்சி) கின்றோம்.

1. சின்னத்துரை சிவலிங்கம் (40 வயது) திருமலை.

2. அந்தோனிப்பிள்ளை ஜெயானந்தன் (ஞானி) (24 வயது மன்னார்.

3 பெருமாள் கிருஷ்ண மூர்த்தி (37 வயது) நுவரெலியா.

4. பாலசிங்கம் பாலராஜா (24 வயது) யாழ்ப்பாணம்

5. சரவணபவா முருகானந்தன் (21 வயது) திருமலை (ஒ)

## மின்சாரம்..

(1ம் பக்கத் தொடர்ச்சி) பவங்கள் ஏனைய உத்தியோகத்தர்களுக்கும், ஊழியர்களுக்கும் ஏற்படாது பார்த்துக்கொள்ள 4-10-88 தொடக்கம் 11 10-88 வரை மாநகர அலுவலகம் மூடப்பட்டிருப்பதுடன் சுத்திகரிப்புச்சேவை, நூலகச் சேவைகள் யாவும் இடைநிறுத்தப்பட்டு சண்டனம் தெரிவிப்பதாகவும் மேற்படி ஊழியர் சங்கம் முடிவெடுத்துள்ளது.

இத்துடன் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாநகர அலுவலகம் முன்பாக சகல ஊழியர்களினது அடையாள உண்ணாவிரதப் போராட்டமும் மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டுள்ளது [ஒ-119]

## வடக்கு-கிழக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி) கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த எந்த ஒரு சச்சேரியிலும் தாக்கல் செய்யப்படவும் இல்லை.

இதேவேளை வடக்கு. கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை ஏற்றுக் கொள்ளும் கால அவகாசத்தில் இரண்டு நாட்கள் கழிந்துவிட்ட போதிலும் நாட்டிலுள்ள எந்த ஒரு அரசியல் கட்சியும் இதுவரை வேட்புமனுக்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை (உ-ஒ-ஐ)

## பஸ் நிலையச்...

(1ம் பக்கத் தொடர்ச்சி) ஒருவர் மரணமடைந்தார்.

சம்பவத்தில் காயமடைந்தவர்களில் மூன்று பெண்கள் யாழ் ஆஸ்பத்திரியில் சடமையாற்றும் ஊழியர் என்பது குறிப்பிடத்தக்கது.

சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபிளான எஸ். சோகன்லால் (வயது 25) என்பவரும், இராமையா பரமநாதன் (வயது 22 உதயபுரம்) என்பவருமே மரணம் அடைந்தவர்கள் ஆவர். (இ-10)

## மரண அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து (பொன்னையா)

நாரந்தனையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சவிரிமுத்து (பொன்னையா) அவர்கள் காலமாகி விட்டார். இவர் மாணிக்கத்தின் அன்புக் கணவரும், யாழ்/தெல்லிப்பளை டயானி இன்டஸ்றீஸ் உரிமையாளர் திரு. ஏ. எஸ். அந்தனிபபிள்ளை, டயானி எலக்றிக்கல்ஸ் யாழ் ஸ்ரான்லி வீதி. உரிமையாளர் திரு. ஏ. எஸ், பஸ்ரியன், திரு. எ. எஸ் பற்றிக் செபேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி பேபி தயாவதி அந்தனிப்பிள்ளை (வீமன் காமம் தெல்லிப்பளை), திருமதி றேஸ் பெரின்டா பஸ்ரியன் (குஞ்சு) (வீமன்காமம் தெல்லிப்பளை) திருமதி லின்டா பற்றிக் ஆகியோரின் அன்பு மாமனாரும், திரு. யோசவ் (நாரந்தனை) அவர்களின் அன்புச் சகோதரரும் பிரியா, சாளினி பிரிந்தா, பிரதீனு, அஜேனஜா ஆகியோரின் பேரனும் திருமதி மரியம்மா பனுவேற்பிள்ளை (முத்துத்தம்பி)யின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக 6-10-88 வியாழக்கிழமை காலை 8-30 மணிக்கு இல. 814, ஆஸ்பத்திரி வீதி இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு யாழ் புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
ஏ. எஸ், அந்தோனிப்பிள்ளை
814, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம் [6945]

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் கனகரத்தினம்

(முன்னாள் தபால் ஊழியர்)

பொன்னம்பலம் கனகரத்தினம் காலமானார். இவர் பொன்னம்பலம் வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், நாகரத்தினத்தின் அன்புக் கணவரும், சற்குணவதி, சாயுச்சியம், காலஞ்சென்ற சத்தியதேவி, இரவீந்திரன் (நோர்வே), மகேந்திரன் (நோர்வே), பரமேஸ்வரன் (நோர்வே) புலேந்திரன் (நோர்வே), ஜயேந்திரன் (நோர்வே), சாரதா (நோர்வே) அவர்களின் அன்புத் தந்தையும், குகதாசன் Physio-Tharaphist), அ ரர் துரைசிங்கம், (புகையிரத இலாகா முதன்மை முகாமி - Fpli), றஞ்சிதா (நோர்வே), சாந்தி (நோர்வே), பாரதி (நோர்வே); மோகனவல்லி, கோணேஸ்வரன் (நோர்வே பல்கலைக்கழகம்) அவர்களின் மாமனாரும், புண்ணியமூர்த்தி (இளைப்பாறிய தொலைத் தொடர்பு ஊழியர்) யின் சகோதரரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 6- 10- 88 வியாழக்கிழமை காலை 9.00மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி, மக்கள், மருமக்கள்
14, கனகரத்தினம் வீதி
அரியாலை,
யாழ்ப்பாணம். (6938)

### திரு. குட்டித்தம்பி சிவராமலிங்கம்

விழுகிட்டி, ஏழாலை தெற்கு

திரு. குட்டித்தம்பி சிவராமலிங்கம் 25-9-88 இல் கனடாவில் சிவபதமடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற P. W. D ஓவசியர் திரு குட்டித்தம்பியினதும், காலஞ்சென்ற திருமதி கனகம்மாவினதும் சிரேஷ்ட புத்திரனும், திருமதி அம்மணி அம்மா திருமதி புவனேஸ்வரி, காலஞ்சென்ற பொலீஸ் அதிபர் திரு துரைசிங்கம், திருமதி சேதுநாயகி. திருமதி தையல்நாயகி. (வவுனியா பெருந்தெருக்கள் திணைக்களக் கணக்காளர் திரு. சண்முகலிங்கம் ஆகியோரினது அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திரு இராமலிங்கம் (D.F.O) காலஞ்சென்ற திரு. சிவலிங்கம் (J.P) சுங்கத் திணைக்கள மதிப்பீட்டாளர், திருமதி சரஸ்வதி, திரு. சிவசிதம்பரம் (இளைப்பாறிய கமத்தொழில் திணைக்கள உதவிக் கமிஷனர்), காலஞ்சென்ற திரு சிவலிங்கம் (மில்க்வைற் ஸ்தாபனம்), திருமதி கனகராணி (ஆசிரியை சிதம்பராக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருமதி பியங்காவின் (கனடா) அன்புக் கணவருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-9-88 இல் கனடாவில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இத் தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. சண்முகலிங்கம்
15 ஆம் கட்டை,
உடுப்பிட்டி. (7140)

### திருமதி சத்தியானந்தமூர்த்தி சிவயோகம்

திருமதி சத்தியானந்தமூர்த்தி சிவயோகம் லண்டனில் காலமானார். அன்னார் செம்மலை, தர்மபுரம் மகாவித்தியாலயங்களின் முன்னை நாள் கணித, விஞ்ஞான ஆசிரியையும் லண்டன் சத்தியானந்தமூர்த்தியின் அன்பு மனைவியும், சாவகச்சேரி வல்லிபுரம் தங்கமுத்து தம்பதிகளின் மகளும், சேவையர் சிவராசா, சிவபாக்கியம், சிவகாமி ஆகியோரின் சகோதரியும் கிராமசேவையாளர் தில்லையம்பலம், க. கந்தையா புஷ்பராணி ஆகியோரின் மைத்துனியும், கதிர்காமநாதனின் சிறியதாயாரும். சின்னத்தம்பியின் மருமகளும் ஆறுமுகம் வள்ளிப்பிள்ளையின் பெருமகளும் எழுதுமட்டுவாள் வீரசிங்கம் கமலம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கிருபாதேவி (ஆசிரியை, மகளிர் மகாவித்தியாலயம் சாவகச்சேரி), கிருபானந்தமூர்த்தி சிறீறங்கமூர்த்தி (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம், இந்திராதேவி (சீமேந்துத் கூட்டுத்தாபனம் K K S), மகேஸ்வரன், சாந்தா (ஜேர்மனி, ஆகியோரின் மைத்துனியுமாவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் V. Ananth, 100. Hall Road, Eastham London, E 6 - 2ND என்னும் முகவரியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. சிவராசா,
சேவையர்
'திருவதிகை இல்லம்'
டச்சு வீதி,
சாவகச்சேரி. (6944)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 05- 10- 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Wednesday 5th October 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org